சிவில் சமூக நிழல் அறிக்கை

சமர்ப்பணம்:

நிதி நடவடிக்கை பணிக்குழுவின்
இலங்கை தொடர்பிலான பரஸ்பர மதிப்பீடு
2026



நிதி ஒழுக்கத்திற்கும் ஜனநாயக ஆட்சிக்குமான
சிவில் சமூகம்

இலங்கை சிவில் சமூக நிதி நடவடிக்கை பணிக்குழு வலையமைப்பு

csoslfatfnetwork@gmail.com

ஆகஸ்ட் 2026

சிவில் சமூகத்தின் நிழல் அறிக்கை

The Financial Action Task Force (FATF)

நிதி நடவடிக்கை பணிக்குழுவிற்கு (FATF) சமர்ப்பிப்பு

2026 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பரஸ்பர மதிப்பீடு

1. நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கையில் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் (NPOs) செயற்பாடுகளை முடக்குவதற்கும், சிவில் சமூகத் தளத்தைச் சுருக்குவதற்கும் நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) தரநிலைகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சட்டங்கள், நிர்வாக உத்தரவுகள் மற்றும் பல்வேறு நடைமுறைகள் மூலம் இந்த ஒடுக்குமுறை முன்னெடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு இலங்கையின் FATF பரஸ்பர மதிப்பீடு (Mutual Evaluation) நடைபெறவுள்ளதைக் காரணம் காட்டி, FATF இன் விதிமுறைகளைப் பூர்த்தி செய்வது கட்டாயமென அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்துகிறது. அத்துடன், இவற்றைச் சட்டமாக்கும் மற்றும் நடைமுறைப்படுத்தும் பணிகளையும் அரசாங்கம் துரிதப்படுத்தியுள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகளில் மிகவும் சமீபத்தியது வரைவு அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) சட்டமாகும். இச்சட்டம், நீதித்துறை மேற்பார்வையின்றி, பொலிஸாருக்கும் ஏனைய நிர்வாக அமைப்புகளுக்கும் பரந்த மற்றும் தன்னிச்சையான அதிகாரங்களை வழங்குகிறது. குறிப்பாக, நீதிமன்ற உத்தரவின்றி நிறுவன வளாகங்களுக்குள் நுழைந்து ஆவணங்களைப் பரிசோதித்தல், பதிவை இடைநிறுத்துதல் போன்ற அதிகாரங்கள் இதில் அடங்குகின்றன.

மேலும், NGOக்களை நிர்வகிப்பதற்கென அதிகாரம் குவிக்கப்பட்ட ஏகாதிபத்திய அமைப்பொன்றின் கீழ், பரந்த அளவிலான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் கட்டாயமாகப் பதிவு செய்து, தகுதிவாய்ந்த அதிகாரத்தின் (Competent Authority) நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என இந்த வரைவுச் சட்டம் கட்டாயப்படுத்துகிறது.

இவற்றுள் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் நுண்கடன் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs), நம்பிக்கை நிதியங்கள் (Trusts), உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் (Companies Limited by Guarantee), சங்கங்கள், சபைகள், சமூக விடுதிகள், மன்றங்கள் (Foundations), இயக்கங்கள், அரசுகளுக்கிடையேயான ஒப்பந்தத்தின் மூலம் நிறுவப்படாத சர்வதேச நிறுவனங்கள், அத்துடன் பொதுமக்களின் நலனுக்காகவும் தன்னார்வ சமூக சேவை அல்லது இலாப நோக்கற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காகவும் ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட நபர்களால் உருவாக்கப்பட்ட குழுக்கள் ஆகியவையும் அடங்குகின்றன.

2026 ஆம் ஆண்டு, நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் (திருத்தச்) சட்டம் (FTRA), பணமோசடி தடுப்புச் (திருத்தச்) சட்டம் 2026 (PMLA) மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான உடன்படிக்கைச் சட்டம் 2026 (CSTFA) ஆகியவற்றில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், முடிவெடுக்கும் அதிகாரத்தை ஒரு சில அரச அதிகாரிகளின் வசம் கொண்டு வருகின்றன.

NPOக்கள் மீது தண்டனைக்குரிய நிர்வாக நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரமும் இந்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தங்கள், கடுமையான தண்டனைகளை விதிக்கும் போது, போதுமான சட்டரீதியான பாதுகாப்புகளையோ மேல்முறையீடு செய்வதற்கான வாய்ப்புகளையோ வழங்குவதில்லை.

மேலும், ஒழுங்குமுறைப்படுத்தும் (Regulatory) மற்றும் விசாரணை அதிகாரிகள் தங்களுக்குரிய அதிகார வரம்புகளை மீறி அதிகாரங்களைப் பயன்படுத்தவும் இத்திருத்தங்கள் அனுமதிக்கின்றன. அதுமட்டுமல்லாமல், பொதுவாக நீதிமன்றங்களுக்கே உரிய அதிகாரங்களையும் பணிகளையும் இந்த அதிகாரிகளுக்கு வழங்குகின்றன.

இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நிர்வாக அறிவுறுத்தலானது, அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தில் பதிவு செய்யப்படாத அனைத்து இலாப நோக்கற்ற நிறுவனங்களும் (NPOs) வெளிநாட்டு நிதியைப் பெறும் சந்தர்ப்பங்களில், வங்கிகள் அவசியமான மேலதிக முன்னாய்வு (Enhanced due diligence) நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோருகிறது.

இருப்பினும் நடைமுறையில், வங்கிகள் இத்தகைய மேலதிக முன்னாய்வு நடவடிக்கைகளைச் செய்வதைத் தவிர்த்துவிட்டு, அரச சார்பற்ற நிறுவனங்கள் செயலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் அந்நிதியை வரவு வைப்பதை மறுத்துவிடுகின்றன.

இத்தகைய சந்தர்ப்பங்களில், நியாயமான சந்தேகத்திற்கான எந்த அடிப்படையும் இல்லாமல், வங்கிகள் அந்த அரச சார்பற்ற நிறுவனங்களைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு (TID) அடிக்கடி அறிக்கையிடுகின்றன.

இதன் விளைவாக, அந்த நிறுவனங்களின் பணியாளர்கள் விசாரணைக்காக அழைக்கப்படுவதுடன், பாதுகாப்புப் பிரிவினரின் கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தலுக்கும் ஆளாகின்றனர்.

2025 ஆம் ஆண்டில் 100-க்கும் மேற்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனங்களிடம் (NPOs) நடத்தப்பட்ட ஆய்வில், அவை வங்கி மற்றும் ஏனைய நிதிச் சேவைகளைப் பெறுவதில் கடுமையான சிரமங்களை எதிர்கொள்வது கண்டறியப்பட்டது. இதன் காரணமாக, இவ்வமைப்புகள் நிதிச் சேவைகளைப் பெறுவதிலிருந்து விலக்கப்படும் நிலையும் (financial exclusion), வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக (derisking) இவ்வமைப்புகளுக்கு நிதிச் சேவைகளை வழங்குவதைக் கட்டுப்படுத்தும் அல்லது மறுக்கும் நிலையும் ஏற்படுவதாக அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

இவை தற்செயலாகவோ அல்லது எதிர்பாராமலோ நடக்கும் விளைவுகள் அல்ல. இலாப நோக்கற்ற நிறுவனங்களுடன் (NPOs) நடந்த ஆலோசனைக் கூட்டங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகள், கருத்துகள் மற்றும் சட்டங்களை உருவாக்கும் அரசின் போக்கு ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது, NPO-க்களின் செயல்பாடுகளை முடக்குவதற்காக அரசு ஒரு திட்டமிட்ட நாடகத்தை அரங்கேற்றுவது தெளிவாகிறது.

அதாவது, NPO-க்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியாதவாறு கடும் கட்டுப்பாடுகளை விதித்து, அவற்றை எப்போதும் தீவிர கண்காணிப்பிலும் பாதுகாப்பு வளையத்திற்குள்ளும் வைத்திருக்க அரசு திட்டமிடுகிறது.

இந்தச் சூழலில், பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்கிறார்கள் என்ற எந்தவித நியாயமான சந்தேகமும் இல்லாவிட்டால்கூட, ஒரு சிறிய பணப் பரிமாற்றம், வெளிநாட்டு உதவி அல்லது மனித உரிமைகள் தொடர்பான ஒரு திட்டம் என எதைக் காரணம் காட்டியும், எந்த நேரத்திலும் NPO-க்கள் மீது திடீர் சோதனைகள் நடத்தப்படலாம் அல்லது அது குறித்து முறைப்பாட்டு அறிக்கைகள் சமர்பிக்கப்படலாம்.

2. அறிமுகம்

2.1. அறிக்கையின் நோக்கம் மற்றும் அது உள்ளடக்கும் விடயங்கள்

இந்த அறிக்கையின் நோக்கம், கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரத்தை மீறும் வகையில், நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) தரநிலைகள் அரசால் எவ்வாறு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை எடுத்துரைப்பதாகும்.

இந்த அறிக்கை, இலங்கையில் இயங்கும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை உள்ளடக்கிய இலங்கை சிவில் சமூக FATF வலையமைப்பினால் (Sri Lanka Civil Society FATF Network) தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வலையமைப்பு, அரசாங்கத்தின் பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதியுதவி ஒழிப்பு (AML/CFT) நடவடிக்கைகளின் தாக்கங்களை ஆவணப்படுத்துவதுடன், இந்நடவடிக்கைகள் FATF தரநிலைகளுக்கு இணங்க அமைய வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருகிறது.

3. ஆய்வுமுறை

அரசாங்கத்தின் பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதியுதவி ஒழிப்பு (AML/CFT) நடவடிக்கைகள் சிவில் சமூகத் தளம் மற்றும் அதன் சுயாதீன செயற்பாடுகளில் ஏற்படுத்தும் பாதக விளைவுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காக இவ்வறிக்கை பல அணுகுமுறைகளைப் பயன்படுத்தியுள்ளது.

3.1. தொடர்புடைய தேசிய சட்டங்கள் மற்றும் அரச கொள்கை ஆவணங்களை மீளாய்வு செய்தல்

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக, இலங்கையில் நடைமுறையில் உள்ள தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகள், அத்துடன் இந்த விடயம் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி (CBSL) மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் ஆகியவை அவ்வப்போது வெளியிட்டுள்ள சுற்றறிக்கைகள் உள்ளிட்ட சட்ட மற்றும் கொள்கை ஆவணங்கள் விரிவாக மீளாய்வு செய்யப்பட்டன.

இந்த மீளாய்வின் அடிப்படையில், நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) பரிந்துரைகள் மற்றும் அவற்றின் அடிப்படைக் கொள்கைகளை வழிகாட்டியாகக் கொண்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக, FATF இன் 8-வது பரிந்துரை மற்றும் அதனுடன் தொடர்புடைய விளக்கக் குறிப்புகள், அத்துடன் இலாப நோக்கற்ற அமைப்புகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதைத் தடுப்பது தொடர்பான FATF இன் சிறந்த நடைமுறைகள் ஆகியவை இந்தப் பகுப்பாய்வில் கருத்தில் கொள்ளப்பட்டன.

3.2. வங்கிச் சேவைகளுக்கான அணுகல் பற்றிய ஆய்வு

அரசாங்கத்தின் AML/CFT (பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதியுதவி ஒழிப்பு) கொள்கைகளின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கும், நிதிச் சேவைகளை இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) பெற்றுக்கொள்வது தொடர்பான அனுபவப் பூர்வமான (empirical) தரவுகளைச் சேகரிப்பதற்கும், இலங்கையிலுள்ள 100 சிவில் சமூக அமைப்புகளுக்கு (CSOs) இடையே ஒரு அளவுசார் ஆய்வு (quantitative survey) நடத்தப்பட்டது. மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் அடிமட்டச் சமூகக் குழுக்கள் உட்படப் பல்வேறு வகையான சிவில் சமூக அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு பன்முகத் தன்மையான மாதிரியை (diverse sample) இலக்காகக் கொண்டே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

3.3. பண்புசார் கலந்தாலோசனைகள் (Qualitative consultations)

இலங்கை முழுவதும் உள்ள சிவில் சமூக அமைப்புகள் (CSOs) மற்றும் சமூக அமைப்புகளுடன் நேர்காணல்களும் இலக்குக் குழுக் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன. இந்தக் கலந்துரையாடல்கள், ஆய்வின் கண்டறிதல்களை மேலும் விரிவுபடுத்தியதுடன், சட்டபூர்வமான சிவில் சமூகச் செயற்பாடுகள் மீதான அரசின் அதீத கட்டுப்பாடுகள் மற்றும் வேவு பார்க்கும் நடவடிக்கைகள் காரணமாக அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தான தங்களின் நேரடி அனுபவங்களையும், அதற்காக அவர்கள் பின்பற்றும் சமாளிப்பு உத்திகளையும் பதிவு செய்தன.

3.4. ஆய்வில் எதிர்கொண்ட சவால்கள்

இந்த அறிக்கையைத் தயாரிக்கும் போது எதிர்கொண்ட முக்கிய சவால்கள் பின்வருமாறு:

- **பழிவாங்கல் குறித்த பயம்: பாதுகாப்புத் துறையால் சிவில் சமூக அமைப்புகள் (CSOs) கண்காணிக்கப்படுதல், வேவு பார்க்கப்படுதல் மற்றும் துன்புறுத்தப்படுதல் போன்ற காரணங்களால், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) பழிவாங்கப்படுவோமோ என்ற அச்சத்தில் வெளிப்படையாகப் பேசத் தயங்கின. இத்தகைய அச்சம் காரணமாகவே பல நிறுவனங்கள் கேள்விக்கொத்துக்குப் பதிலளிக்காமல் தவிர்த்திருக்கலாம்.**

- **சுயாதீனமான முறைப்பாட்டு வழிமுறைகள் இல்லை: AML/CFT கொள்கைகளால் CSO-க்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், குறிப்பாக வங்கிகள் தொடர்பான சிக்கல்கள் அல்லது புலனாய்வுச் சேவைகளின் துன்புறுத்தல்கள் குறித்து முறைப்பாடு செய்வதற்கான சுயாதீனமான வழிமுறைகள் CSO-க்களுக்கு இல்லை. இதனால், இத்தகைய முறைப்பாடுகள் மற்றும் சம்பவங்களை ஆய்வு செய்து, அவற்றை மீளாய்வு செய்வதற்கும், காலப்போக்கில் அவை எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் உதவும் உத்தியோகபூர்வ பதிவுகளோ புள்ளிவிவரங்களோ இல்லை. இதன் காரணமாக, இத்தகைய சம்பவங்களின் எண்ணிக்கை மற்றும் தன்மை குறித்து அதிகாரப்பூர்வமாகப் பதிவுசெய்யப்பட்ட தகவல்களைப் பெற முடியவில்லை. எனவே, இத்தகைய சம்பவங்கள் தொடர்பான ஒரே ஆவணப்படுத்தலாக இவ்வறிக்கையின் கண்டறிதல்கள் மட்டுமே உள்ளன. இதனால், இவ்வறிக்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள சம்பவங்களின் எண்ணிக்கை, உண்மையில் இடம்பெற்றுள்ள சம்பவங்களின் எண்ணிக்கையைவிட குறைவாக இருக்கக்கூடும்.**

- **தொலைதூரப் பகுதிகளில் உள்ள சமூக மட்டத்தில் செயல்படும் அமைப்புகளை அணுகுவதில் சவால்கள்: இணையவழி கணக்கெடுப்பை மட்டுமே பயன்படுத்தியதால், இணைய வசதியும் அதைப் பயன்படுத்தும் திறனும் உள்ள அமைப்புகளுக்கே அதிக வாய்ப்பு கிடைத்தது. இதனால், தொலைதூரப் பகுதிகளில் உள்ள, குறிப்பாக இணைய வசதியோ அல்லது அதைப் பயன்படுத்தும் திறனோ இல்லாத சமூக மட்டத்தில் செயல்படும் அமைப்புகளை அணுகுவதில் குறிப்பிடத்தக்க சவால்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக, இத்தகைய வசதியோ திறனோ இல்லாத சில அமைப்புகள் இந்த ஆய்வில் இடம்பெறாமல் போயிருக்கக்கூடும்.**

4. பின்னணிச் சூழல்

4.1. போருக்குப் பிந்தைய மற்றும் ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பின்னரான இலங்கையில் சிவில் சமூகத்தைப் பாதுகாப்பு அச்சுறுத்தலாகப் பார்க்கும் போக்கு

தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள் சிவில் சமூக அமைப்புகளைச் (CSOs) சந்தேகக் கண்ணோடு பார்த்து வந்துள்ளன. வெளிநாட்டு நிதியைப் பெறும்[1] இத்தகைய அமைப்புகள் மீது தீவிரக் கட்டுப்பாடுகளும் அவற்றின் மீது நேரடி அரச நிர்வாகமும் வேண்டும் என்று அரசின் முக்கிய அதிகாரிகளும் அரசாங்க உறுப்பினர்களும் பகிரங்கமாகக் கோரியுள்ளனர்.

மேலும், வெளிநாட்டு நிதி மூலம் உள்ளூர் சிவில் சமூக அமைப்புகளுக்குப் பணம் வழங்கப்பட்டு, இன-மத சிறுபான்மையினர் "தீவிரவாதமயமாக்கப்படுவதாகவும்", உள்ளூர் கல்வி[2] முறையில் தலையிடப் படுவதாகவும், மனித உரிமைப் பிரச்சினைகளை[3] எழுப்புவதன் மூலம் அரசாங்கத்தின் "நற்பெயரைக் குலைப்பதாகவும்" கூறி சிவில் சமூக அமைப்புகள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களாகச் சித்தரிக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக, போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயங்கும் மனித உரிமைப் பாதுகாவலர்களும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் போன்ற குழுக்களும் இந்த அவதூறுப் பிரச்சாரங்களின் முதன்மை இலக்குகளாக மாறியுள்ளனர். ஆயுத மோதல் காலத்திலேயே தொடங்கிய இத்தகைய அவதூறுப் பிரச்சாரங்கள், போருக்குப் பின்னரான[4] காலப்பகுதியில் மேலும் ஆழமாக வேரூன்றி வலுப்பெற்றன.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர், முஸ்லிம் சமூகமும், முஸ்லிம் மதக் குழுக்களும், தொண்டு நிறுவனங்களும் கூட தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதப்பட்டன. இதன் விளைவாக, பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில்[5] கத்தார் நிதியுதவியுடன் இயங்கிய தொண்டு நிறுவனம் ஒன்று தடை செய்யப்பட்டது. இருப்பினும், இலங்கையில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியின் போது அந்த நாட்டிற்கான[6] ராஜதந்திர உறவுகளைச் சீரமைப்பதற்கும், தடையின்றி எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்கும் இந்த அமைப்பு மீதான குற்றச்சாட்டுகள் பின்னர் கைவிடப்பட்டன.

2021ஆம் ஆண்டில், அரச சார்பற்ற நிறுவனங்கள் செயலகத்தின் அப்போதைய பணிப்பாளர் ஜெனரல் பின்வருமாறு குறிப்பிட்டார்: "தற்போதைய சூழ்நிலையில், அண்மைய ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பிறகு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் மீதான பொதுமக்களின் பார்வை கணிசமாக மாறியுள்ளதுடன், பொதுவாக நாடு முழுவதும் அவை குறித்த ஒரு சாதகமற்ற நிலையே காணப்படுகின்றது. அதோடு, நிதியைத் தவறாக நிர்வகித்தல், பயங்கரவாதத்திற்கும் பிரிவினைவாதத்திற்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளித்தல், தேசியப் பாதுகாப்புச் சிக்கல்கள், இறையாண்மைக்கான அச்சுறுத்தல்கள், மற்றும் மதம், கலாச்சாரம் சார்ந்த கரிசனைகள் போன்ற பல்வேறு காரணங்களும் மக்கள் மத்தியில் இத்தகைய பாதகமான கருத்து நிலை[7] உருவாவதற்குக் காரணமாக அமைகின்றன."

தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் (CSOs) பயங்கரவாதத்திற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளிக்கின்றன என்பன உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதன் மூலம், அவ்மைப்புகளின் செயற்பாடுகளின் மீது தீவிரக் கண்காணிப்பையும் அவர்களின் மீதான விசாரணையையும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும், வெளிநாட்டு நிதியைப் பெறும் அவற்றின் உரிமையில் தலையிடுவதையும் நியாயப்படுத்தி வந்துள்ளன.

குறிப்பாக, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இயங்கும் சிவில் சமூகக் குழுக்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் போன்றோர் ஆயுத மோதல் முடிவுக்கு வந்த காலப்பகுதியில் இருந்து[8,9] காவல்துறை மற்றும் இராணுவ உளவுத்துறையின் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID), பயங்கரவாத விசாரணைப் பிரிவு (TID) போன்ற பல்வேறு பாதுகாப்புப் பிரிவினரின் கடுமையான கண்காணிப்புக்கும் தீவிரச் சோதனைக்கும் ஆளாகியுள்ளன.

---

[1] https://www.dailymirror.lk/print/breaking-news/NGOs-spend-billions-unchecked/108-294744
[2] https://adaderana.lk/news/59892?nid=59892
[3] https://timesofindia.indiatimes.com/world/south-asia/lankan-govt-not-to-succumb-to-pressures-from-ngos-president-gotabaya-rajapaksa/articleshow/72224484.cms
[4] https://adaderana.lk/news/23000?nid=23000&mode=beauti
[5] https://dohanews.co/crisis-hit-sri-lanka-scraps-ban-on-qatar-charity-as-it-scrambles-to-secure-fuel/
[6] https://island.lk/lanka-lifts-ban-on-qatar-charity-as-it-tries-to-secure-fuel-supply-from-doha/
[7] https://www.dailymirror.lk/hard-talk/Govt-to-introduce-fresh-legislations-to-supervise-NGOs-INGOs-Raja-Goonaratne/334-220774
[8] https://documents.un.org/doc/undoc/gen/g25/136/66/pdf/g2513666.pdf
[9] https://www.ohchr.org/en/documents/reports/ahrc6021-situation-human-rights-sri-lanka-comprehensive-report-united-nations

2019 நவம்பரில் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிவில் சமூக அமைப்புகளின் (CSOs) மீதான பாதுகாப்புத்துறை சார்ந்த கெடுபிடிகள் (securitization)[10] மேலும் தீவிரமடைந்தன. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் செயல்படும் அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும், பாதுகாப்புப் பிரிவினர் தங்களின் அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்கு[11,12] வந்து சென்றதாகத் தெரிவித்தனர். மேலும், அந்த அமைப்புகளின் விவரங்கள், நிதி ஆதாரங்கள், செயற்பாடுகள் மற்றும் தனிப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகளின் சொந்த விவரங்கள் போன்றவற்றைப் பாதுகாப்புப் பிரிவினர் கோரியதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சிவில் சமூக அமைப்புகள் (CSOs) வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெறுவதால்[13], தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்தின் (VSSO Act) கீழ் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்யுமாறு கோரி, அந்த அமைப்புகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் தொடர்ந்து கடிதங்களை அனுப்பி வருகிறது. ஏற்கனவே பிற சட்டங்களின் கீழ், குறிப்பாக உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட இலாப நோக்கற்ற கம்பனிகளாக (non-profit company limited by guarantee) பதிவு செய்யப்பட்டு, கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்தின் (Registrar of Companies) மேற்பார்வைக்கு உட்பட்டுள்ள அமைப்புகளுக்கும் இவ்வாறு கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததிலிருந்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வந்தது. 2022 ஆம் ஆண்டில் இது தற்காலிகமாக வெளிநாட்டு விவகார அமைச்சின் கீழ் மாற்றப்பட்டாலும், பெரும்பாலும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் மட்டுமே தொடர்ந்து செயல்பட்டுள்ளது. இது NGOக்களைத் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதும் பார்வையைக் காட்டுகிறது.

2025 செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் இலங்கை மதிப்பீடு செய்யப்பட்டபோது, NGO செயலகமானது ஊரக வளர்ச்சி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சகத்தின் கீழ் மாற்றப்பட்டது.

இருப்பினும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் பொதுமக்கள் பாதுகாப்புப் அமைச்சிலிருந்து மாற்றப்பட்ட போதிலும், NGOக்களைப் பாதுகாப்பு அச்சுறுத்தலாக அணுகும் நோக்கில் எந்த மாற்றமும் நிகழவில்லை. அதற்கேற்ப அரசின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் எந்தத் திருத்தமும் செய்யப்படவில்லை.

இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) பற்றி தீவிர சந்தேகக் பார்வை நிலவுவதுடன், அவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் முடக்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளன. இருப்பினும், இன்றுவரை பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்ததாக எந்தவொரு NGO மீதும் குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை.

இதற்கு மாறாக, அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கும் மனித வள அபிவிருத்திக்கும் பங்களிப்பு வழங்கி வருகின்றன.

எவ்வாறாயினும், FATF நடைமுறைப்படுத்தலின் பெயரால் அரசாங்கம் விதிக்கும் கட்டுப்பாடுகளும் தடைகளும், சமூக மேம்பாட்டிற்காக NPO-க்கள் வழங்கும் பங்களிப்பைப் பாதகமாகப் பாதிக்கின்றன. அத்துடன், அரசாங்கத்தின் இந்த NGOக்கள் தொடர்பான சந்தேகமும் தீவிர போக்கும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைவதிலும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் இடையூறாக அமைகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதப்பட்டு வந்த சூழலுக்கு மாறாக, கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் அரசாங்கம் பொதுமக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போராடியபோது, சுகாதாரத் துறைக்கு ஆதரவளிக்குமாறு[14] NGO செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

தேசிய பாதுகாப்பு பற்றிய பாராளுமன்றத் துறைசார் மேற்பார்வை குழுவினால் (Parliamentary Sectoral Oversight Committee on National Security) பெப்ரவரி. 2020 இல் வெளியிடப்பட்ட, "புதிய பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் ஒழித்து, இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதன் மூலம் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அவசியமான

[10] https://colombogazette.com/2020/07/06/special-probe-to-commence-on-non-governmental-organisations

[11] https://monitor.civicus.org/explore/civic-freedom-violations-persist-sri-lanka-president-expands-his-powers/

[12] https://www.amnesty.org/en/documents/asa37/1678/2020/en/

[13] Interviews with CSOs;
https://www.ft.lk/opinion/Weaponisation-of-Financial-Action-Task-Force-and-impact-on-CSOs/14-773063

[14] https://www.sundaytimes.lk/210516/news/govt-seeks-funds-from-ingos-and-ngos-for-covid-battle-444172.html

சட்டங்களை உருவாக்குவது மற்றும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையில்" NGOக்களின் மேற்பார்வை தொடர்பாக பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.[15]

- **இலங்கைக்கு அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் அனைத்து நிதி மற்றும் உதவிகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக, இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு (FIU), தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் வகையிலான ஒரு பொறிமுறையை நிறுவுதல்.**

- **அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் வெளிநாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டம் (Foreign Contribution Regulation Act) போன்றதொரு சட்டத்தை நிறுவி, இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை முறையாகத் கணக்காய்விற்கு உட்படுவதை உறுதிப்படுத்தல். அத்துடன், சமூகத்தின் அனைத்து இனக்குழுக்களின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் வகையில்தான் இந்த நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.**

அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுவதாவது:

"வெளிநாட்டு நிதியைப் பெறும் பெருமளவிலான நிறுவனங்கள் பதிவு செய்யப்படாத சூழ்நிலையில், நாட்டில் புழக்கத்தில் உள்ள பணம் முறையாகக் கண்காணிக்கப்படுவதில்லை. முறையான ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்படாமல், வெவ்வேறு வெளிநாட்டு நிதிகளின் அடிப்படையில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள் ஊடாகப் பணம் பெறப்படுவதாகப் பாதுகாப்புப் படைகளாலும் வெகுஜன ஊடகங்களாலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மேலும் விசாரிக்கும்போது, மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து கூட நிதியைப் பெறும் பல நிறுவனங்கள் பிராந்திய மட்டத்தில்கூட இயங்குவதும், அத்தகைய நிதியின் அளவும் அவை பயன்படுத்தப்படும் நோக்கங்களும் எத்தகைய முறையான நிர்வாகத்திற்கும் உட்படுத்தப்படாமல் இருப்பதும் தெளிவாகிறது."

2022 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பதவி விலகலை வலியுறுத்தி, அரசாங்க மாற்றத்திற்கு வழிவகுத்த "அரகலய" (Aragalaya) பெருந்திரள் மக்கள் போராட்டம், அப்போதைய அரசாங்கத்தினால் தவறாகச் சித்தரிக்கப்பட்டதுடன், NGOகளுக்கு வெளிநாடுகளிலிருந்து மாற்றப்பட்ட நிதியே ஜனாதிபதியின் பதவி விலகலுக்கும் காரணமானது என்றும் அப்போதைய அரசாங்கத்தால் குற்றம்சாட்டப்பட்டது.[16]

இதுபோன்ற கருத்துகள், சிவில் சமூக அமைப்புகள் (CSOs) மீது ஆழமான சந்தேகம் ஏற்படுவதற்கு வழிவகுத்துள்ளன. குற்றவியல்/பயங்கரவாத விசாரணைப் பிரிவுகள் மற்றும் புலனாய்வுச் சேவைகளால் மேற்கொள்ளப்படும் தொந்தரவுகளும் அச்சுறுத்தல்களும் இந்த நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன.

எனவே, பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவியைத் தடுப்பது என்ற காரணத்தைக் கூறி, அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGO) நிதி ஆதாரங்களைக் கட்டுப்படுத்த FATF-ஐ ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவது சிவில் சமூகத்தின் குரலை முடக்குவதற்கான நீண்டகால முயற்சிகளின் ஒரு பகுதியாகவே பார்க்கப்பட வேண்டும். குறிப்பாக, மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலையும் ஜனநாயக ஆளுகையையும் கோரி சிவில் சமூகம் முன்வைக்கும் கோரிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்கும்[17] நோக்கில், தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நீண்டகாலமாக இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளன.

[15] https://www.parliament.lk/uploads/comreports/1582610584075624.pdf#page=1
[16] https://hirunews.lk/en/446285/namal-rajapaksa-vows-probe-into-aragalaya-funding-under-future-government
[17] https://www.ft.lk/columns/Central-Bank-NGO-Secretariat-and-weaponisation-of-Financial-Action-Task-Force/4-770882; https://srilankabrief.org/repression-by-regulation-when-fatf-mutual-evaluations-become-government-weapons/

இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) மீது பயங்கரவாத நிதியுதவி, பணமோசடி அல்லது பெரிய அளவிலான நிதி மோசடிகள் தொடர்பில் இதுவரை பகிரங்கமாக எந்தவொரு வழக்குத் தொடரப்பட்டதாகவோ அல்லது குற்றச்சாட்டு நிரூபணமானதாவோ இல்லை.

மாறாக, இலங்கையின் வங்கித் துறையை உள்ளடக்கிய அண்மைய காலத்து பெரிய அளவிலான நிதி மோசடிகள் நிதித்துறைக்குள் காணப்படும் நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் பணமோசடி தடுப்பு அமைப்புகளில் உள்ள பாரிய பலவீனங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

2026 ஆம் ஆண்டில், நேஷனல் டெவலப்மென்ட் பேங்க் பிஎல்சி (National Development Bank PLC) நிறுவனம் 13.2 பில்லியன்[18] ரூபாய் மதிப்பிலான உள்நாட்டு மோசடி ஒன்றை அம்பலப்படுத்தியது. இது நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய வங்கி மோசடிகளில் ஒன்றாகும்.

இதற்கிடையில், இலங்கை அரச அதிகாரிகள் 13 வணிக வங்கிகளில் உள்ள 227 வங்கி கணக்குகளை உள்ளடக்கிய ஒரு பெரிய வெளிநாட்டு நாணய மோசடியைக் கண்டறிந்தனர். இதன் மூலம் போலி இறக்குமதி பரிவர்த்தனைகளைப் பயன்படுத்தி சுமார் 85 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வெளிநாடுகளுக்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது.[19]

நிதிக் குற்றங்களும் பணமோசடி அபாயங்களும் முறையான நிதி அமைப்புகளுக்குள்தான் பெருமளவில் குவிந்துள்ளன என்பதை இத்தகைய விவகாரங்கள் நிரூபிக்கின்றன. ஆனால், சிவில் சமூகத்தின் மீது திணிக்கப்படும் அதீத கண்காணிப்பு வங்கித்துறை மீது காட்டப்படுவதில்லை அவ்வாறான ஒரு நிலையிருந்திருந்தால், இந்தப் பரிவர்த்தனைகள் ஒவ்வொரு நிலையிலும் சந்தேகத்திற்குரியவையாகக் கண்டறியப்பட்டிருக்கும்.

5. FATF பரிந்துரைகளுடன் சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பு இணக்கமாக உள்ளதா என்பது குறித்த மீளாய்வு

2026 ஜூலை மாதத்தில், FATF இன் பரஸ்பர மதிப்பீட்டிற்குத் தயாராகும் நோக்கில், FATF தரநிலைகளுக்கு ஏற்ப சட்டங்களை மாற்றுவதற்காக அரசாங்கம் மூன்று சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டது. அவை, நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் (Financial Transactions Reporting Act – FTRA), பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான உடன்படிக்கைச் சட்டம் (Convention on the Suppression of Terrorist Financing Act – CSTFA) மற்றும் பணமோசடி தடுப்புச் சட்டம் (Prevention of Money Laundering Act – PMLA) போன்றனவாகும்.

ஆயினும், இந்தத் திருத்தங்கள் சர்வதேச மனித உரிமைத் தரநிலைகளுக்கும் அரசியலமைப்பில் இருக்கும் பாதுகாப்புகளுக்கும் இணங்கவில்லை.

இந்தச் சட்டங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவதால், முடிவெடுக்கும் முழு அதிகாரமும் ஒருசில அதிகாரிகளிடம் மட்டுமே ஒப்படைக்கப்படுகிறது. இதனால் சிவில் சமூக அமைப்புகள் (CSOs), எவ்வித நியாயமான விசாரணையுமின்றி தன்னிச்சையாகப் பதிவு நீக்கப்படுதல், வங்கிக் கணக்குகள் முடங்குதல் அல்லது உரிமங்கள் மறுக்கப்படுதல் போன்ற கடுமையான நிர்வாகத் தண்டனைகளுக்கு எளிதில் ஆளாக நேரிடுகிறது.

கடுமையான தண்டனைகளை வழங்கும் போது, இந்தத் திருத்தங்கள் உரிய சட்ட நடைமுறைப் பாதுகாப்புகளையும் மேல்முறையீட்டு முறைகளையும் மிகக் குறைந்த அளவிலேயே அளிக்கின்றன. மேலும், ஒழுங்குபடுத்தும் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்கு அவர்கள் செயல்பட வேண்டிய எல்லைக்கு மீறிய அதிகாரங்களை வழங்குவதோடு, அவர்களுக்கு நீதித்துறை அதிகாரங்களையும் அளிக்கின்றன.

அதிகாரத்தை ஒரே இடத்தில் குவிப்பதற்குப் பதிலாக, நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புடன், பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்துப் போராடுவதற்கான (AML/CFT) நடவடிக்கைகள் ஆபத்தை அடிப்படையாகக் கொண்டும் ஏற்புடையதான அளவிலான (proportionate) அணுகுமுறையுடனும் மேற்கொள்ளப்பட வேண்டும் என FATF தரநிலைகள் வலியுறுத்துகின்றன. இந்த அணுகுமுறைக்கு இந்தத் திருத்தங்கள் இணக்கமாக இல்லை.

---

[18] https://cdn.cse.lk/cmt/announcement_portal_prod/Corporate%20Disclosure-%20National%20Development%20Bank%20PLC%2006.04.2026_49238571050043746.pdf

[19] https://www.newswire.lk/2026/06/09/sri-lanka-uncovers-major-import-scam-that-smuggled-millions-of-dollars-out-of-the-country/

5.1. சட்டத் திருத்தங்கள் (Legislative Amendments)

1. பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான உடன்படிக்கை (திருத்தச்) சட்டம், 2026 (CSTFA) (The Convention on the Suppression of Terrorist Financing) (Amendment) Act 2026

CSTFA-இன் இந்தத் திருத்தமானது, FATF தரநிலைகளுக்கும் பரிந்துரைகளுக்கும் முரணான விதிகளைக் கொண்டுள்ளது.

இச்சட்டம் திருத்தப்படுவதற்கு முன்னர், ஒரு நபர் பயங்கரவாதக் குற்றத்தில் ஈடுபடலாம் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால், அவருக்குச் சொந்தமான நிதி மற்றும் சொத்துக்களை 7 நாட்களுக்கு முடக்கக் காவல் துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. ஆயினும் இந்தத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அந்தத் கால அளவைப் 14 வேலை நாட்களாக நீட்டிக்கிறது. இது முந்தைய கால அளவை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.

நீதிமன்றத்தின் நேரடி மேற்பார்வை இல்லாமல் செய்யப்படும் இத்தகைய நீட்டிப்பு, FATF பரிந்துரைக்கும் பாதுகாப்பு வழிமுறைகளையும், சட்டப்பூர்வமான நியாயமான நடைமுறையைப் (due process) பின்பற்ற வேண்டிய அரசியலமைப்புத் தேவையையும் கடுமையாகப் புறக்கணிக்கிறது.

மேலும், முடக்கல் உத்தரவை உறுதி செய்வதற்காக உயர் நீதிமன்றத்தில் ஒருதரப்பு மனுவை (ex parte application) தாக்கல் செய்யக் காவல் துறை அதிகாரிகளுக்கு உள்ள காலக்கெடுவையும் இந்தத் திருத்தம் 14 வேலை நாட்களாக நீட்டிக்கிறது. உயர் நீதிமன்றம் இந்த முடக்கல் உத்தரவை உறுதி செய்வதற்கு முன்பு, அதை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கோ அல்லது கேள்வி எழுப்புவதற்கோ இச்சட்டத்தில் எந்தவொரு வழிவகையும் வழங்கப்படவில்லை.

எதிர்த்தரப்புக்கு அறிவிக்காமல் தாக்கல் செய்யப்படும் ஒருதரப்பு வாத விண்ணப்பமானது, அந்த உத்தரவுக்கு ஆளாகும் நபரின் சட்டபூர்வமான நியாயமான நடைமுறை உரிமைகளைப் பலவீனப் படுத்துகிறது.

நீதித்துறை கண்காணிப்பு இல்லாமல் முடக்கல் உத்தரவுகள் அமுலில் நீடிக்கும் கால அளவை நீட்டிப்பது மனித உரிமைகள் தரநிலைகளுக்கு முரணானது. குறிப்பாக, அது ஒரு நபரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வசதிகளை அணுகும் வாய்ப்பைப் பறிக்கும் போது, அது மனிதாபிமானமற்ற நடத்தையாக அமைகிறது.

இந்தத் திருத்தத்தின் அரசியலமைப்புச் சட்டபூர்வத்தன்மையைப் பரிசீலிக்கக் கோரி, அதை எதிர்த்து இலங்கை உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இது குறித்து 2026 ஏப்ரல் 28 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தனது தீர்மானத்தில், ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஏழு நாள் காலத்தை பதினான்கு வேலை நாட்களாக நீட்டிப்பது[20] அரசியலமைப்புக்கு முரணானதல்ல என உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது. மேலும், சட்டமூலத்தின் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.

2. 2026 ஆம் ஆண்டு நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் (திருத்தச்) சட்டம் (The Financial Transactions Reporting (Amendment) Act 2026)

நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தில் (FTRA-வில்) மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தில் உள்ள பல ஏற்பாடுகள் FATF தரநிலைகளுக்கு முரணாக இருப்பதுடன், FATF-இன் தேவைகளையும் தாண்டிச் செல்கின்றன.

உதாரணமாக, இந்தச் சட்டம், நிதியியல் உளவறிதல் பிரிவின் (FIU) தலைவருக்கு, பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல், கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய உத்தரவுகள், சுற்றறிக்கைகள் மற்றும் சட்டப்பூர்வ விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வழிகாட்டுதல்களை வெளியிடுவது உள்ளிட்ட பரந்த அளவிலான விதிகளை உருவாக்கும் அதிகாரத்தை வழங்குகிறது.

குறிப்பாக, இது இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கு (NPOs) மிகவும் கரிசனைக்குரிய விடயமாகும். ஏனெனில், தெளிவாக வரையறுக்கப்படாத மற்றும் பரந்த அளவிலான விதிமுறைகளைச் சட்டமாக இயற்றாமல், நிர்வாக உத்தரவுகள் மூலம் திணிக்க முடியும். இதனால், அதிகாரிகள் தங்கள்

[20] https://supremecourt.lk/wp-content/uploads/special_dt/sc_sd_17_2026.pdf

விருப்பத்திற்கேற்ப விதிகளை அமல்படுத்தும் நிலை ஏற்படலாம். இதன் விளைவாக, NPOக்கள் தன்னிச்சையானதும் அடக்குமுறையானதுமான பல்வேறு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகக்கூடும்.

ஒரு நபர் அல்லது அமைப்பினதோ நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவு (FIU) தற்காலிகமாக முடக்கிவைக்கக்கூடிய கால எல்லையை, இச்சட்டமூலம் ஏழு நாட்களிலிருந்து பதினான்கு வேலைநாட்கள் வரை (ஏறத்தாழ மூன்று வாரங்கள்) நீடிக்கின்றது.

எதிர்த்தரப்புக்கு அறிவிக்காமல் தாக்கல் செய்யப்படும் ஒருதரப்பு உயர் நீதிமன்ற நடைமுறைகள் (ex parte) மற்றும் மூடிய நீதிமன்ற விசாரணைகள் (in-camera hearings) ஆகியவற்றுடன் இது இணைக்கப்பட்டுள்ளது.

இச்செயல்முறை, உரிய சட்ட நடைமுறைகள் (due process) மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்த கடுமையான கரிசனைகளை எழுப்புவதோடு, நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் மீது தன்னிச்சையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கான அபாயத்தையும் ஏற்படுத்துகிறது. இது மக்களின் வாழ்வாதாரங்களையும் வர்த்தகச் செயல்பாடுகளையும் கடுமையாகப் பாதிக்கக்கூடும்.

தெளிவான புறநிலை அளவுகோல்கள் (objective criteria), வெளிப்படைத்தன்மை, நடைமுறைசார் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் சுயாதீனமான நீதித்துறை மேற்பார்வை ஆகியன அற்ற நிருவாகக் கட்டமைப்புகள் ஊடாக, கடுமையான தடைகளையும் இணக்கப்பாட்டுக் கடப்பாடுகளையும் இச்சட்டத் திருத்தமானது திணிக்கின்றது. இதனால், விதிகள் தன்னிச்சையாகவும் வெவ்வேறு விதமாகவும் நடைமுறைப்படுத்தப்படும் அபாயம் அதிகமாக உள்ளது (arbitrary and inconsistent enforcement).

இத்திருத்தத்தின் கீழ், தொகை எவ்வளவு என்று இன்னும் தீர்மானிக்கப்படாத நிலையில், குறிப்பிட்ட ஒரு வரம்பிற்கு மேற்பட்ட அனைத்து நிதிப் பரிவர்த்தனைகளையும் நிதி உளவறிதல் பிரிவுக்கு (FIU) வங்கிகள் அறிக்கையிட வேண்டும் என இச்சட்டம் கட்டாயப்படுத்துகிறது.

இது நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் அமையாமல், அனைத்துப் பரிவர்த்தனைகளுக்கும் பொதுவாகப் பொருந்தும் ஒரு பொதுப்படையான அறிக்கையிடல் கடப்பாட்டைத் (blanket reporting obligation) தோற்றுவிக்கிறது. மேலும், இது நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) அபாய அடிப்படையிலான மற்றும் ஏற்புடையதான அளவுடைய (risk-based and proportionate) அணுகுமுறையிலிருந்து முற்றாக மாறுபடுகிறது. அத்துடன், இது நிதி நிறுவனங்களுக்கு கணிசமான நிருவாகச் சுமைகளையும் உருவாக்குகின்றது.

சர்வதேச அமைப்புகள் உள்ளிட்ட பல தரப்பினருடன் விரிவான தகவல்களைப் பகிர்ந்துகொள்ள நிதி உளவறிதல் பிரிவுக்கு (FIU) இத்திருத்தங்கள் வழிவகை செய்கின்றன. எவ்வாறாயினும், தரவுகளைத் தக்கவைத்தல் (data retention), சட்டரீதியான சிறப்புரிமை பெற்ற தகவல்களின் பாதுகாப்பு (protection of privileged information), அல்லது தனிநபர் தரவுகளை நீக்குதல் போன்றவற்றுக்கான முறையான பாதுகாப்புப் பொறிமுறைகளை இச்சட்டம் உறுதிப்படுத்தவில்லை.

இது பாரதூரமான தனியுரிமை மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான கடுமையான கரிசனைகளைத் தோற்றுவிக்கிறது.

மேலும், மத்திய வங்கி ஆளுநரின் தலைமையிலான தேசியக் குழுவிற்கு, ஒழுங்குமுறை அமைப்புகளுக்கும் சம்மந்தப்பட்ட தரப்பினருக்கும் கட்டாய உத்தரவுகளைப் பிறப்பிக்கவும், விவகாரங்களை அமைச்சரவை மட்டத்திற்குக் கொண்டு செல்லவும் இச்சட்டம் பரந்த அதிகாரங்களை வழங்குகிறது. இதனால், தற்போது நடைமுறையில் உள்ள சட்ட மற்றும் நிறுவனப் பொறுப்புக்கூறல் முறைகள் பலவீனமடைந்து, அவை மீறப்படும் நிலை ஏற்படுகிறது.

இத்திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திற்கு முரணானது எனக் கூறி உச்ச நீதிமன்றத்தில் சவால் செய்யப்பட்டது. எனினும், தனது தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் அதனை ஏற்கவில்லை.[21] விதிமுறைகளை உருவாக்கும்போதும் கடுமையான தடைகளை விதிக்கும்போதும் நிதி உளவறிதல் பிரிவின் (FIU) தலைவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தக் கூடிய போதுமான பாதுகாப்பு வழிமுறைகள் இத்திருத்தத்தில் உள்ளதாக நீதிமன்றம் முடிவு செய்தது. இத்திருத்தத்தை அரசியலமைப்போடு ஒத்திசைவானதாக மாற்றுவதற்காக, குறிப்பிட்ட சில வாசகங்களில் மாத்திரம் சிறிய அளவிலான மாற்றங்களைச் செய்யுமாறு நீதிமன்றம் பரிந்துரைத்தது.

[21] https://www.parliament.lk/uploads/bills/gbills/scdet/6423.pdf

3. பணமோசடி தடுப்பு (திருத்தச்) சட்டம் 2026
(The Prevention of Money Laundering (Amendment) Act 2026)

இத்திருத்தச் சட்டம், குறிப்பாக சொத்துக்களை முடக்குதல், பறிமுதல் செய்தல் மற்றும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பான விவகாரங்களில், விசாரணை மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்குப் பரந்த மற்றும் தெளிவான வழிகாட்டுதல்களற்ற தன்னிச்சையான அதிகாரங்களை வழங்குகிறது.

இதில் போதிய நடைமுறைசார் பாதுகாப்பு வழிமுறைகள் எவையும் இல்லை. மேலும், பரந்த அளவிலான முடக்கல் மற்றும் பறிமுதல் அதிகாரங்கள் மூலம், சொத்துரிமை, வாழ்வாதாரம் மற்றும் சட்டபூர்வமான நிதிச் செயற்பாடுகளில் ஊடுருவக்கூடிய தேவையற்ற தலையீடுகளை இது அனுமதிக்கிறது.

இதில் தெளிவாக வரையறுக்கப்படாததும், மிகவும் பரந்த அளவில் பொருள்படக்கூடியதுமான பல விதிகள் உள்ளன. குறிப்பாக, "சிறப்பு விசாரணை முறைகள்" எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான தெளிவான விதிமுறைகள் இல்லை. அதேபோல், ஒரு சட்டவிரோத செயலின் மூலம் பெறப்பட்ட சொத்துகளை முடக்குவது மற்றும் "சட்டவிரோத நடவடிக்கை" என்பதன் வரம்பை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் தெளிவான வரையறைகள் வழங்கப்படவில்லை.

இந்தச் சட்டம், ஒருவர் குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை அவர் குற்றமற்றவர் என்ற அடிப்படைக் கொள்கையையும், ஒருவர் தமக்கே எதிராக சாட்சியமளிக்கக் கட்டாயப்படுத்தப்படுவதிலிருந்து அவருக்குள்ள பாதுகாப்பையும் பாதிக்கும் வகையில் விசாரணை முறைகளை உருவாக்குகிறது.

குறிப்பாக, கட்டாயப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசிகளைப் பெறுதல் மற்றும் பின்னர் முரண்பாடானதாகக் கருதப்படும் வாக்குமூலங்களுக்கு தண்டனை வழங்குதல் போன்ற நடைமுறைகள் இதில் அடங்குகின்றன.

இத்திருத்தம், நிதி மற்றும் தனிப்பட்ட தகவல்களை வெளிநாட்டு நிறுவனங்களுடன் பரந்த அளவில் பகிர்வதற்கு அனுமதிக்கிறது. ஆனால், இவ்வாறு தகவல்களைப் பகிர்வது அவசியமானதா, அது தேவையான வரம்புக்குள் உள்ளதா, அதற்குப் பொறுப்புக்கூறலும் உரிய கண்காணிப்பும் உள்ளதா என்பதை உறுதி செய்வதற்கான போதுமான பாதுகாப்புகள் இதில் இல்லை.

மேலும், பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு முன்னரே விதிமுறைகளை நடைமுறைப் படுத்துவதற்கும் இது அனுமதிக்கிறது. இதனால், பாராளுமன்றத்தின் மேற்பார்வையும் கட்டுப்பாடும் பலவீனமடைகின்றன.

உச்ச நீதிமன்றம், பணமோசடி தடுப்புச் சட்டமூலம் (PMLA Bill) பெரும்பாலும் அரசியலமைப்புக்கு இணக்கமானது என்றும், சில குறிப்பிட்ட பிரிவுகளில் திருத்தங்கள் செய்யப்பட்டால், அதனை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம் என்றும் தீர்மானித்தது.[22]

சொத்துகளை முடக்குதல் மற்றும் பறிமுதல் செய்வது தொடர்பான விரிவுபடுத்தப்பட்ட ஏற்பாடுகளும், அதிகரிக்கப்பட்ட விசாரணை அதிகாரங்களும் அரசியலமைப்பில் உள்ள பாதுகாப்புகளுக்கு முரணானவை அல்ல என நீதிமன்றம் கருதியது.

மேலும், **FATF தரநிலைகளுக்கு ஏற்ப இலங்கையின் பணமோசடி தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கான நியாயமான நடவடிக்கைகள் இவை** என்ற அரச தரப்பின் வாதத்தையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

எனினும், 14ஆம் பிரிவு (தொடர்புடைய சொத்துகளை முடக்குவது தொடர்பானது) மற்றும் 18ஆம் பிரிவின் சில பகுதிகள் (சந்தேக நபர்கள் சாட்சியமாகப் பயன்படுத்தக்கூடிய சத்தியக் கடதாசிகளை வழங்க வேண்டும் என்றும், பொய்யான சாட்சியம் வழங்கியதாகக் கருதப்படும் நபருக்கு, வழக்கமான வழக்குகளில் நடைபெறும் முழுமையான நீதிமன்ற விசாரணை மற்றும் அதற்குரிய நடைமுறைகளை மேற்கொள்ளாமல், குறுகிய நீதிமன்ற விசாரணையின் மூலம் தண்டனை வழங்கலாம் என்றும் கூறுபவை) போன்றவை மிகவும் பரந்தளவில் இருப்பதாக நீதிமன்றம் கண்டறிந்தது.

இவை அரசியலமைப்பின் 12(1) மற்றும் 13(3) உறுப்புரைகளின் கீழ் உறுதி செய்யப்பட்ட சமத்துவம் மற்றும் நியாயமான நடைமுறை உரிமைகளை மீறுவதாகவும் நீதிமன்றம் தீர்மானித்தது.

[22] https://www.parliament.lk/en/business-of-parliament/bill-details/G6422

பணமோசடி தடுப்புச் சட்டமூலத்தின் (PMLA Bill) குறித்த விடயங்களில் திருத்தங்கள் செய்யப்படாவிட்டால், அவற்றை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் சிறப்புப் பெரும்பான்மை (மொத்த உறுப்பினர்களில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு) தேவைப்படும் என நீதிமன்றம் தீர்மானித்தது. ஆனால், பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டால், அவ்வாறு சிறப்புப் பெரும்பான்மை தேவையில்லை என்றும் நீதிமன்றம் தெரிவித்தது:

1. நிதி முடக்கல் உத்தரவுகளுக்கு கடுமையான நீதித்துறை மேற்பார்வையையும், அவற்றுக்கான கால வரம்புகளையும் அறிமுகப்படுத்துதல்.
2. பொலிஸ் காவலில் இருக்கும் போது ஒருவர் வழங்கும் வாக்குமூலங்களுக்கு, சான்றுக் கட்டளை சட்டத்தின் (Evidence Ordinance) கீழ் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புகளைத் தொடர்ந்து உறுதி செய்தல்.
3. பொய்யான சாட்சியம் வழங்கியதற்காக ஒரு சாட்சியைத் தண்டிப்பதற்கு முன்னர், அதற்கென தனியான சுருக்கமான நீதிமன்ற விசாரணையை (வழக்கமான முழுமையான விசாரணைக்குப் பதிலாக நடைபெறும் குறுகிய விசாரணை) நடத்துவதை உறுதி செய்தல்.

இந்த மாற்றங்கள் சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டால், முழு சட்டமூலத்தையும் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என நீதிமன்றம் தீர்மானித்தது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்மானத்தைத் தொடர்ந்து, 2026 ஜூலை 9 அன்று, ஒரு பிரிவில் மட்டும் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர், பாராளுமன்றம் இந்தச் சட்டமூலத்தை சிறப்புப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது.

திருத்தப்பட்ட 18ஆம் பிரிவில், சந்தேக நபர்கள் காவலில் இருக்கும்போது அல்லது கைது செய்யப்பட்ட நிலையில் வழங்கும் சத்தியக் கடதாசிகள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படுவது தொடர்பில் சான்றுக் கட்டளை சட்டம் (Evidence Ordinance) பொருந்தும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பொய்யான சாட்சியம் வழங்கியதற்காக ஒரு சாட்சிக்கு தண்டனை வழங்குவதற்கு முன்னர், தனியான சுருக்கமான நீதிமன்ற விசாரணையை (வழக்கமான முழுமையான விசாரணைக்குப் பதிலாக நடைபெறும் குறுகிய விசாரணை) நடத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் பரிந்துரைத்திருந்தது.

எனினும், 14ஆம் பிரிவில் நீதித்துறை மேற்பார்வையையும் எவ்வளவு காலம் என்பதற்கான வரம்பையும் சேர்க்குமாறு நீதிமன்றம் வழங்கிய பரிந்துரையை அரசாங்கம் ஏற்கவில்லை. இதனால், அந்தப் பிரிவில் மாற்றம் செய்யாமல், சட்டமூலம் சிறப்புப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

4. அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான வரைவுச் சட்டம்

2024 ஆம் ஆண்டில், அப்போது ஆட்சியில் இருந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், 1980 ஆம் ஆண்டின் தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்திற்குப் பதிலாக, அரச சார்பற்ற நிறுவனங்கள் (பதிவு செய்தலும் கண்காணித்தலும்) தொடர்பான புதிய சட்ட வரைவொன்றைச் சிவில் சமூகத்துடன் பகிர்ந்துகொண்டது. சட்டபூர்வமாகச் செயற்படும் சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், அவற்றுக்கான ஒன்றுகூடும் சுதந்திரத்தைப் பறிப்பதற்கும் அரசாங்கத்திற்கு அளவுக்கு மீறிய பரந்த அதிகாரங்களை இந்த வரைவு வழங்குவதாகச் சிவில் சமூகங்கள் விமர்சித்தன. எனினும், அப்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் இச்சட்ட வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், அநுர குமார திசாநாயக்க அரசாங்கத்தின் பொதுப் பாதுகாப்பு அமைச்சினால் இதே வரைவு தெரிவுசெய்யப்பட்ட சிவில் சமூக நிறுவனங்களுடன் பகிரப்பட்டது.

எனினும் இந்த சட்ட வரைவு சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு முரணாக உள்ளதாகவும், நீதித்துறை மேற்பார்வை இன்றிப் பொலிஸாருக்கும் ஏனைய நிர்வாக அமைப்புகளுக்கும் விரிவான மற்றும் தன்னிச்சையான அதிகாரங்களை வழங்குவதன் மூலம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை பறிக்கிறது என சிவில் சமூகங்கள் தங்களது விமர்சனங்களை முன்வைத்தன.

எவ்வாறாயினும், 2026 ஆம் ஆண்டு ஜூலையில், பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் (AML/CFT) தொடர்பான புதிய பிரிவுகளைச் சேர்த்து, அரசாங்கம் அதே வரைவை மீண்டும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புகளுடன் பகிர்ந்துகொண்டது.

குறிப்பாக, அரச சார்பற்ற நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கும், பணமோசடியைக் கண்டறிந்து அவற்றின் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கும் இந்த வரைவுச் சட்டத்தில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அதிகாரம் வழங்குகின்றன.

பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவி (ML/FT) தொடர்பான விதிகளை உள்ளடக்கியுள்ளமை, சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு முரணான நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கும், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை கட்டுப்படுத்திச் சிவில் சமூகத் தளத்தைச் சுருக்குவதற்கும் FATF இன் தரநிலைகளை ஆயுதமயமாக்கும் முந்தைய அரசாங்கங்களின் வியூகத்தை தற்போதைய அரசாங்கமும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

FATF தரநிலைகளை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி சிவில் சமூகத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அணுகுமுறை, அரசாங்கங்கள் மாறியபோதிலும் தொடர்ந்து இடம்பெற்று வருவதை இது சுட்டிக்காட்டுகிறது.

மேலும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் காலத்திலும் சரி, அனுர குமார திசாநாயக்க அரசாங்கத்தின் காலத்திலும் சரி, இந்தச் சட்டத்தை வரைவதற்கான செயல்முறையில் சிவில் சமூக அமைப்புகளுடன் (CSOs) எந்தவிதமான ஆலோசனையும் நடத்தப்படவில்லை.

தேசிய சட்டங்கள் சர்வதேச மனித உரிமைத் தரநிலைகளுடன்[23] ஒத்துப்போகின்றனவா என்பதைப் பரிசீலித்து மீளாய்வு செய்வது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டரீதியான பொறுப்பாகும்.

இவ்வாறான நிலையில், மனித உரிமைகளில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய இந்த வரைவு சட்டத்தை உருவாக்கும் போது, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன்கூட எந்தவிதமான ஆலோசனையும் நடத்தப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இந்த வரைவுச் சட்டத்தின் பல பிரிவுகள் FATF இன் பரிந்துரை 8-க்கு (Recommendation 8) முரணானவையாக உள்ளன. உதாரணமாக, இலாப நோக்கற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களும் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் (Competent Authority) பதிவு செய்வதும், அதன் **நிர்வாகத்திற்கு உட்படுவதும்** இச்சட்டத்தின் கீழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் மூலம் நிறுவப்படாத சர்வதேச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் நுண்கடன் நிறுவனங்கள், நம்பிக்கை நிதியங்கள், உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் (Guarantee Limited Companies), சங்கங்கள், சபைகள், சமூக விடுதிகள், மன்றங்கள், இயக்கங்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்காகவும் தன்னார்வ சமூக சேவை அல்லது இலாப நோக்கற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவும் ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட நபர்களால் அமைக்கப்பட்ட குழுக்கள் ஆகியவை இத்தகைய நிறுவன வகைகளில் அடங்கும்.

இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யாமை ஒரு குற்றமாகக் கருதப்பட்டுள்ளது. ஆனால், FATF தரநிலைகளின்படி, உண்மையான அபாயங்களின் அடிப்படையிலும், ஏற்புடைய அளவிலும் (Proportionate) குறிப்பிட்ட இலக்கைக் கொண்டதாகவும் (Targeted) மட்டுமே மேற்பார்வை இருக்க வேண்டுமே தவிர, அனைத்து அமைப்புகளுக்கும் பொதுவான கண்மூடித்தனமான அறிக்கையிடல் தேவைகளை அது கோருவதில்லை. அந்த வகையில், இச்சட்ட விதிகள் FATF தரநிலைகளுக்கு முரணானவையாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகளாகவோ அல்லது அறக்கட்டளைகளாகவோ ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், அவைகள் முறையே கம்பனிகள் சட்டம் மற்றும் அறக்கட்டளைகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைகளுக்கு ஏற்கனவே உட்பட்டவை ஆகும்.

எனவே, அவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தில் (NGO Secretariat) மீண்டும் பதிவு செய்யுமாறு கட்டாயப்படுத்தக் கூடாது. மேலும், NGOக்களை நிர்வகிக்கும் அத்தகைய ஒரு அதிகார அமைப்பு அவசியமென FATF கோருவதும் இல்லை, அவ்வாறான ஒரு விடயத்திற்கு ஒப்புதல் அளிப்பதுமில்லை.

FATF பரிந்துரை 8, FATF வரையறையின் கீழ் வரும் இலாப நோக்கற்ற நிறுவனங்களில் (NPOs) குறிப்பிட்ட பகுதியினர் மட்டுமே பயங்கரவாத நிதியுதவி (TF) துஷ்பிரயோகம் தொடர்பான அதிக ஆபத்தை கொண்டவர்களாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறது. எனினும், முன்மொழியப்பட்ட சட்டம், அனைத்து நிறுனவங்களும் பணமோசடி/பயங்கரவாத நிதியுதவி (ML/FT) அபாயத்தை கொண்டுள்ளன எனக்கருதி தீவிர பாதுகாப்புமயமாக்கப்பட்ட (highly securitised) கட்டமைப்புக்குள் அவற்றைக் கொண்டுவருகிறது.

[23] https://www.hrcsl.lk/press-notice-on-draft-non-governmental-organisations-registration-and-supervision-bill/

தகுதிவாய்ந்த அதிகாரத்திற்கு (Competent Authority), ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் நிர்வாகக் குழுவின் அனைத்து உறுப்பினர்களினதும் அல்லது பெரும்பான்மையினரதும் எழுத்துபூர்வ கோரிக்கையின் பேரில், அல்லது பதவி வகிப்பாளர்களின் ஒப்புதலின் பேரில், அந்த நிர்வாகக் குழுவின் எந்தவொரு கூட்டத்திலும் கலந்துகொள்ளும் அதிகாரம் உண்டு.

மேலும், இந்த சட்ட வரைவின் படி, இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கு தகுதிவாய்ந்த அதிகாரத்தால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் அதன் பின்னர் அது புதிய விண்ணப்பம் மூலம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

முன்மொழியப்பட்ட சட்டத்தின்படி, பதிவு செய்யப்பட்ட எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனமும் நாட்டின் இறையாண்மை அல்லது ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிற்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது, அல்லது பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை பாதிக்கும் எந்தவொரு பாதகமான செயலையும் தூண்டவோ அல்லது ஏற்படுத்தவோ கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை வரைவிலக்கணப்படுத்தப்படாத சொற்களாகும். இச்சொற்கள், அரசாங்கத்தை விமர்சிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும், மனித உரிமைப் பணியையும் கூட ஒரு சட்டவிரோத நடவடிக்கையாக முத்திரை குத்துவதற்குப் பரந்த அளவில் பயன்படுத்தக்கூடும்.

முன்மொழியப்பட்ட சட்டம், நீதித்துறை மீளாய்விற்குட்படாத விரிவான, தன்னிச்சையானஅதிகாரங்களை தகுதிவாய்ந்த அதிகாரத்திற்கும் பொலிஸாருக்கும் வழங்குகிறது. உதாரணமாக, தகுதிவாய்ந்த அதிகாரமானது, ஒரு பொலிஸ் அதிகாரியுடன் இணைந்து, முன்னறிவிப்புடன் ஆனால் நீதிமன்ற ஆணை இன்றி, எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனத்தின் வளாகத்திற்குள் நுழைந்து அதன் பதிவேடுகளை அணுகவும் பரிசோதிக்கவும் அதிகாரம் கொண்டுள்ளது.

மேலும், இந்த வரைவுச் சட்டம், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள், செயற்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவும், கண்காணிக்கவும், தலையிடவும் தகுதிவாய்ந்த அதிகாரத்திற்கு பரந்தளவிலான அதிகாரங்களை வழங்குகிறது, இது ஒன்றுகூடுவதற்கான உரிமை மற்றும் சிவில் தளத்தை பாதுகாத்தல் தொடர்பான சர்வதேச மனித உரிமைத் தர நிர்ணயங்களுக்கு முரணானது.

பணமோசடி, பயங்கரவாத நிதியுதவி அல்லது நிதி முறைகேடு தொடர்பான முகத்தோற்ற அளவிலான சான்று (Prima Facie) இருக்கும்போது அல்லது அவற்றின் நடவடிக்கைகளோ அல்லது அவர்களது இருப்போ "தேசிய பாதுகாப்பு, நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு பாதகமான அல்லது அச்சுறுத்தலாக இருக்கும் பட்சத்தில்" ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் பதிவை இடை நிறுத்தும் அதிகாரம் தகுதிவாய்ந்த அதிகாரத்திற்கு உள்ளது.

5.2. நிர்வாக அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் (Administrative instructions and guidelines)

1. சுற்றறிக்கைகள்

அ. சுற்றறிக்கை இல. 01/19 [24]

2019 மே 23 அன்று, இலங்கை மத்திய வங்கியின் நிதி உளவறிதல் பிரிவு (FIU), உரிமம் பெற்ற அனைத்து வணிக வங்கிகளுக்கும் சுற்றறிக்கை இல. 01/19 ஐ வெளியிட்டது.

இச்சுற்றறிக்கை, 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளர் முன்னாய்வு) விதிகளின் விதி 51ஐக் குறிப்பிடுகிறது. இதன்படி, NGO செயலகத்தில் பதிவு செய்யப்படாத ஓர் அரச சார்பற்ற நிறுவனம் வெளிநாட்டு நிதியைப் பெறும்போது, ஒவ்வொரு நிதி நிறுவனமும் மேம்படுத்தப்பட்ட முன்னாய்வு நடைமுறையை (Enhanced Due Diligence) மேற்கொள்ள வேண்டும் என இந்த விதி குறிப்பிடுகிறது. அத்துடன், தேவையான சந்தர்ப்பங்களில், நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (FTRA) பிரிவு 7 இன் கீழ், ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தைப் பற்றி நிதி உளவறிதல் பிரிவுக்கு (FIU) குறித்த வங்கி அறிக்கையிடலாம்.

குறித்த சட்டத்தின் பிரிவு 7இன் படி, ஒரு கொடுக்கல் வாங்கல் சட்டவிரோதமான செயற்பாடு அல்லது வேறு ஏதேனும் குற்றச் செயலுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என வங்கிக்கு நியாயமான காரணங்களின் அடிப்படையில் சந்தேகம் ஏற்பட்டால், அந்தக் கொடுக்கல் வாங்கல் குறித்து இலங்கை மத்திய வங்கியின் நிதி உளவறிதல் பிரிவுக்கு (Financial Intelligence Unit – FIU) வங்கி தகவல் தெரிவிக்க வேண்டும்.

[24] https://fiusrilanka.gov.lk/docs/Circulars/2019/Circular-01-2019.pdf

மேலும், பிரிவு 7(2)(c) இன் படி, வங்கி FIUக்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் அதற்கு சந்தேகம் ஏற்படுவதற்கான காரணங்களையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அதாவது, வங்கியின் சந்தேகம் நியாயமான காரணங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். மாறாக, அது ஆதாரமற்றதாகவோ, போலியானதாகவோ அல்லது தன்னிச்சையானதாகவோ இருக்கக்கூடாது.

சுற்றறிக்கை இல. 01/2019, ஓர் அரச சார்பற்ற நிறுவனம் (NGO) அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பதற்காக மட்டும், வெளிநாட்டிலிருந்து அந்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கிற்கு பணம் வருவதைத் தடுக்குமாறு வங்கிகளுக்கு அறிவுறுத்தவில்லை.

அதற்குப் பதிலாக, பதிவு செய்யப்படாத ஓர் அரச சார்பற்ற நிறுவனம் பெறும் வெளிநாட்டு நிதி குற்றச் செயலுக்குப் பயன்படுத்தப்படலாம் என நியாயமான சந்தேகம் இருந்தால், வங்கிகள் மேம்படுத்தப்பட்ட முன்னாய்வு நடைமுறையை (Enhanced Due Diligence) மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு நியாயமான சந்தேகம் ஏற்பட்டால், இலங்கை மத்திய வங்கியின் நிதி உளவறிதல் பிரிவுக்கு (Financial Intelligence Unit – FIU) எழுத்துமூலம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், இதுவரை நடைமுறையில் உள்ள வேறு எந்தச் சட்டமோ விதிமுறையோ, ஓர் அரச சார்பற்ற நிறுவனம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பதற்காக மட்டும், வெளிநாட்டிலிருந்து அந்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கிற்கு வரும் நிதியைத் தடுக்குமாறு வங்கிகளுக்கு அறிவுறுத்தவில்லை.

ஆனால், நடைமுறையில், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் பெறும் வெளிநாட்டு நிதியை அவற்றின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்க வங்கிகள் மறுக்கின்றன.

மேலும், வெளிநாட்டு நிதியைத் தமது வங்கிக் கணக்குகளில் வரவு வைக்க வேண்டுமெனில், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும் வங்கிகள் அவற்றிடம் கோருகின்றன.

மேலும், அந்த நிதி சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் என நியாயமான சந்தேகம் இல்லாத நிலையிலும், நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (Financial Transactions Reporting Act – FTRA) பிரிவு 7இன் கீழ், சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான அறிக்கைகளை இலங்கை மத்திய வங்கியின் நிதி உளவறிதல் பிரிவுக்கு (Financial Intelligence Unit – FIU) வங்கிகள் சமர்ப்பிக்கின்றன.

இத்தகைய நடைமுறைகள் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே அச்சத்தை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக, சில சிவில் சமூக அமைப்புகள் (CSOs) பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினால் (Terrorism Investigation Division – TID) விசாரணைக்காக அழைக்கப்படுகின்றன. இதனால், அவை தமது செயற்பாடுகளைச் சுதந்திரமாக முன்னெடுப்பதற்குத் தடைகள் ஏற்படுகின்றன.

சுற்றறிக்கை இல. 01/2025[25]

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட, 2025 ஏப்ரல் 4 ஆம் திகதியிடப்பட்ட 01/2025 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்படி, அமைச்சுகளிடமிருந்து அனுமதி அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலம் எடுக்கக்கூடும் என்பதால், "அரச சார்பற்ற நிறுவனமாகப் பதிவு செய்வதற்கான தகைமை உறுதிப்படுத்தல் கடிதம்" ஒன்றின் அடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் வங்கிக் கணக்குகளைத் திறக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒரு வங்கிக் கணக்கைத் திறப்பதற்கு, தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றோ அல்லது அமைச்சுகளிடமிருந்து பாதுகாப்பு அனுமதியைப் பெற வேண்டும் என்றோ சட்டத்தில் எந்தவொரு நிபந்தனையும் இல்லை.

உதாரணமாக, கம்பனிகள் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட ஒரு (இலாப நோக்கற்ற) கம்பனியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஓர் அரச சார்பற்ற நிறுவனம், கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்து உரிய ஆவணங்களை வங்கியில் சமர்ப்பிப்பதன் மூலம் வங்கிக் கணக்கைத் திறக்க முடியும்.

இவ்வாறாக, ஒரு உறுதிப்படுத்தல் கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவையை உள்ளடக்குவதன் மூலம், இச்சுற்றறிக்கையானது நிறுவனப் பதிவுக்கான சட்டபூர்வத் தேவைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக அமைகிறது.

[25] https://www.fiusrilanka.gov.lk/docs/Circulars/2025/Circular_01_2025.pdf

2. மத்திய வங்கிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்[26]

2024 நவம்பர் 6 அன்று, பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுக்கும் தேசியத் திட்டத்தை வலுப்படுத்துவதற்காக, இலங்கை மத்திய வங்கியும் (CBSL) அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இலங்கை மத்திய வங்கியின் (CBSL) செய்தி வெளியீட்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் (Money Laundering/Terrorist Financing – ML/TF) மற்றும் அது தொடர்பான குற்றச் செயல்களுக்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் (NPOs) தவறாகப் பயன்படுத்தப்படலாம். இதனால், நாட்டின் பொருளாதார மற்றும் நிதி அமைப்புகளின் ஸ்திரத்தன்மைக்கும், உலகளாவிய பொருளாதார மற்றும் நிதி அமைப்புகளின் ஸ்திரத்தன்மைக்கும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MOU) மூலம், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பான ஏதேனும் சம்பவம், விசாரணை அல்லது வழக்குத் தொடருதல் பற்றிய தகவல்களை நிதி உளவறிதல் பிரிவுடன் (Financial Intelligence Unit – FIU) பரிமாறிக்கொள்ள முடியும். மேலும், இத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்கள் பற்றிய தகவல்களையும் பரிமாறிக்கொள்ள முடியும்.

இத்தகைய தகவல் பரிமாற்றம், பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் அது தொடர்பான குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும், கண்டறிவதற்கும், அவற்றுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் முக்கியமானதாக அமையும்."

இத்தகைய மொழிப் பயன்பாடு, அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் அச்சுறுத்தலாக இருக்கக்கூடியவையாகச் சித்தரிக்கிறது. குறிப்பாக, அவை "தேசிய நிதி அமைப்புகளின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல்" எனக் குறிப்பிடப்படும்போது, இந்த அணுகுமுறை மேலும் வலுப்பெறுகிறது.

பெரும்பாலான இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (Non-Profit Organisations – NPOs) மிகக் குறைந்த அபாயத்தையே கொண்டுள்ளன என்றும், அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் அனைத்துக்கும் பொதுவாகப் பயன்படுத்தப்படாமல், அபாயம் உள்ள குறிப்பிட்ட அமைப்புகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் FATF இன் 8ஆம் பரிந்துரை குறிப்பிடுகிறது. எனவே, இத்தகைய பொதுவான அணுகுமுறை FATF இன் 8ஆம் பரிந்துரைக்கு முரணானதாகும்.

3. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள் - டிசம்பர் 2024[27]

2024 டிசம்பர் 12 அன்று, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் (NGO Secretariat) வெளியிட்ட அறிவுறுத்தலின்படி, உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs), வேறு சட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட, தேசிய செயலகத்தில் பதிவு செய்ய வேண்டும் எனக் கூறுகிறது

ஒரு சிவில் சமூக அமைப்பானது (CSO) பதிவுக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவுடன், அவ்விண்ணப்பமானது "அனுமதிக்காக" (clearance) பாதுகாப்பு அமைச்சுக்கு (MoD) அனுப்பி வைக்கப்படும் எனக் குறிப்பிட்டப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து "அனுமதி அறிக்கைகளைப்" பெற்றுக்கொள்ளும்போது, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம் "அனுமதி அறிக்கைகளில் ஏதேனும் சிக்கல் இருப்பதாகக்" கண்டறிந்தால், அந்தப் பதிவு விண்ணப்பம் "நிராகரிக்கப்படும்."

எனினும், இதில் "ஒரு சிக்கல்" (a problem) என்பது வரைவிலக்கணப்படுத்தப்படவில்லை. மேலும், பாதுகாப்பு அமைச்சோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகமோ எந்த அடிப்படையில் இந்த மதிப்பீட்டை மேற்கொண்டு "ஒரு சிக்கல்" இருப்பதாக ஒரு முடிவுக்கு வருகிறது என்பதற்கான வரையறுக்கப்பட்ட, புறநிலை அளவுகோல்கள் (objective criteria) எவையும் குறிப்பிடப்படவில்லை.

மேலும், பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு எதிராக மேல்முறையீடு (appeal) செய்வதற்கான வழிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதன் பின்னர் அந்த அமைப்பின் நிலை என்ன என்பது குறித்தும், குறிப்பாக அது ஏற்கனவே வேறொரு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் அதன் நிலை என்ன என்பது குறித்தும் எவ்விதத் தெளிவுபடுத்தலும் இடம்பெறவில்லை.

---

[26] https://ngosec.gov.lk/news-events/anti-money-laundering-measures-to-be-strengthened

[27] https://ngosec.gov.lk/news-events/notice

4. இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான (NGOs) பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கான வழிகாட்டல்கள்[28]

2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகமானது (NGO Secretariat), இலங்கையில் செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு (NGOs) பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கான வழிகாட்டல்களை வெளியிட்டது.

இந்த வழிகாட்டல்கள், அதிகளவிலான நிதிக்கொடைகளைப் பெறும் அரச சார்பற்ற நிறுவனங்களையும், தூரப்பிரதேசங்களில் செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களையும் அதிக அபாயமுள்ளவையாக அடையாளப்படுத்துவதுடன் மட்டும் அல்லாமல் "தீவிரமயமாக்கல் அல்லது தீவிரவாத சித்தாந்தங்களை மேம்படுத்துவதற்கும்" NGO தளங்கள் பயன்படுத்தப்படுவதும் கவனத்திற்குரிய ஒரு விடயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த வழிகாட்டல்களில், தீவிரமயமாக்கல் அல்லது தீவிரவாத சித்தாந்தங்கள் என்றால் என்ன என்பது வரையறுக்கப்படாமையால், அரசு தனது தேவைக்கேற்ப இவற்றினை மாற்றி விரிவாக பயன்படுத்தவும் வாய்ப்பாக அமைகின்றது. உதாரணமாக, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உடன்படிக்கையைத் திரும்பப் பெற வேண்டும் என ஆதரவு தெரிவிப்பதுகூட "தீவிரவாத நடவடிக்கை" என முத்திரை குத்தப்படலாம்.

இந்த வழிகாட்டல்கள், பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கான AML/CFT இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தும் வருடாந்த அறிக்கைச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்குமாறும், பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கான AML/CFT ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிக்குமாறும் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கோருகின்றன. இருப்பினும் இவைகளை அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்று FATF வலியுறுத்தவில்லை. மாறாக, வெளிநாட்டு நிதிக்கொடையாளர்களை இயல்பிலேயே சந்தேக கண்ணோட்டத்துடன் பார்க்கின்ற எண்ணம் காணப்படுவதால், சிவில் சமூக அமைப்புகளை (CSOs) மேம்படுத்தப்பட்ட முன்னாய்வு நடைமுறையினை (Enhanced Due Diligence) மேற்கொள்ள வேண்டும் என இவ்வழிகாட்டல்கள் குறிப்பிடுகின்றன.

5.3. இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) தொடர்பான தேசிய அபாய மதிப்பீடு.

2026ஆம் ஆண்டு ஜனவரியில், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இலாபநோக்கற்ற நிறுவனங்களின் (NPO) அபாய மதிப்பீட்டின் (RA) அறிக்கை சுருக்கம் வெளியிடப்பட்டது.[29] இருப்பினும், அதன் முழுமையான அறிக்கையானது நிதியியல் உளவறிதல் பிரிவிடம் (FIU) விண்ணப்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கையின் மூலமே பெறப்பட்டது.

இவ் அறிக்கை ஆனது இலாபநோக்கற்ற நிறுவனங்களில் (NPO) இயல்பாகவே காணப்படக்கூடிய ஆபத்தானது (Inherent risk), குறைந்த அளவிலிருந்து நடுத்தர அளவினை உடையதாகும் என வரையறை செய்கின்றது. சுற்றுச்சூழல், சுகாதாரம், தூய்மைப்பணி மற்றும் தொழில்முனைவு மேம்பாடு ஆகிய துறைகளில் ஈடுபடும் சிவில் சமூக அமைப்புகள் (CSOs), "இவ்வகைப் பிரிவுகளில் பயங்கரவாத நிதியுதவி ஆபத்தினை கொண்டுள்ளது என்பதற்கு எந்தவொரு சான்றும் இல்லாத காரணத்தால்" குறைந்த அபாயம் கொண்டவை என மதிப்பிடப்பட்டுள்ளன. மேலும், "இத்துறைசார் நிபுணர்களின் கருத்துப்படி, இவை முன்னெடுக்கும் பெரும்பாலான திட்டங்களை நேரடியாக பார்வையிட்டு உறுதிப்படுத்த முடிவதனால், இந்த இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) தீவிரமான பயங்கரவாத அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்ற அச்சநிலைக்கு அப்பால் உள்ளது (Proximity)" என அபாய மதிப்பீடு (RA) சுட்டிக்காட்டுகிறது.

நிவாரணம் வழங்குதல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பணிகளில் ஈடுபடுகின்ற இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPO) நடுத்தரத்திலிருந்து - குறைந்த அபாயம் கொண்டவையாக வகைப்படுத்தப்பட்ட போதிலும் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் அபிவிருத்தித் துறை சார்ந்த சிவில் சமூக அமைப்புக்களுடன் (CSO) ஒப்பிடுகையில், இவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பீட்டளவில் உயர்ந்த அபாய மதிப்பீட்டை நிரூபிப்பதற்கான எந்தவொரு சான்றும் அந்த ஒன்பது பக்க அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. "அதிக அபாயமுள்ளவையாகக் கண்டறியப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் பல இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) மீதும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இலாபநோக்கற்ற நிறுவனங்கள் மீதும் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து கண்காணிப்பை மேற்கொண்டு வருவதாகச் சேகரிக்கப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்துகின்றன" என அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகிறது. மனித உரிமைகள் சார்ந்த துறைகளில் பணியாற்றும் அனைத்து இலாபநோக்கற்ற நிறுவனங்களும் (NPO) சந்தேகக் கண்ணோட்டத்துடனேயே பார்க்கப்படுகின்றன என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. எனினும், இந்நிறுவனங்கள் அதிக அபாயமுள்ளவை என அடையாளம் காணப்பட்டதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய பக்கச்சார்பு அற்ற எந்தவிதமான அளவுகோல்களும் (Objective criteria) குறிப்பிடப்படவில்லை. பெயர் குறிப்பிடப்படாத மற்றும் எண்ணிக்கையும் அறியப்படாத "துறைசார் நிபுணர்கள், இந்த இலாபநோக்கற்ற நிறுவனங்கள்

[28] https://ngosec.gov.lk/images/download/guidelines/2026/AML%20CFT%20Guideline%20for%20NGOs%20English.pdf
[29] https://fiusrilanka.gov.lk/docs/Other/NRA_Report_2024-25/Sri_Lanka_NRA_on_ML_2024_25_Executive_Summary_E.pdf

(NPO) பயங்கரவாதத்திற்கு நிதியளிக்கும் (TF) நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய சாத்தியக்கூறுகளைக் கொண்டவை என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்" என அபாய மதிப்பீடு (RA) வலியுறுத்துகிறது. இருப்பினும், இக்கூற்றை உறுதிப்படுத்துவதற்கு எந்தவொரு ஆதாரமும் முன்வைக்கபபடவில்லை.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவானது (TID) பல இலாபநோக்கற்ற நிறுவனங்களை (NPOs) விசாரணை செய்து வருவதாக அறிக்கை குறிப்பிடுகிறது. இவற்றுள் 13% மனித உரிமைகள் சார்ந்த அமைப்புகளாகவும், 80% கல்வி மற்றும் பயிற்சி செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவைகளாகவும் மற்றும் 7% நிவாரணப் பணிகளில் ஈடுபடக்கூடியவைகளாகவும் காணப்படுகின்றன. சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டக் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளாக அறிக்கையில் குறிப்பிடப்படுகின்ற அம்சங்கள் இலாபநோக்கற்ற நிறுவனங்களின் (NPO) சுயாதீன நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி முடக்குவதே அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் என்பதைப் புலப்படுத்துகின்றன. உதாரணமாக, தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் (VSSO) சட்டத்தின்கீழ் பதிவு செய்யாத சிவில் சமூக அமைப்புகளுக்கு (CSO) எதிராகத் தண்டனை நடவடிக்கைகள் இல்லாமையும், மீளப்பதிவு செய்வதற்கான சட்டரீதியான தேவைப்பாடு இல்லாமையும் அடையாளங்காணப்பட்ட ஒரு குறைபாடாக காணப்படுகிறது. மேலும் "சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை (NGOs) அரசியல்மயமாக்கலில் இருந்து விலக்குவதற்கான (Depoliticising) எந்தவொரு சட்ட ஏற்பாடுகளும் இல்லாமையும் மற்றொரு குறைபாடாக காணப்படுகிறது. ஆயினும், இச்சூழலில் "அரசியல்மயமாக்கல்" என்பதன் பொருள் என்னவென்றோ, அல்லது அது பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்றோ எந்தவொரு விளக்கமும் அதில் வழங்கப்படவில்லை.

5.4. திருத்தப்பட்ட நிதி நடவடிக்கை பணிக்குழுவின் 8 ஆம் இலக்கப் பரிந்துரைக்கு (Revised FATF Recommendation 8) ஏற்ப செயற்படாமை.

அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) தொடர்பான தற்போதைய ஒழுங்குபடுத்தல் தரநிலைகளும் நடைமுறைகளும் நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) வழிகாட்டுதல்களுடன் முரண்படுகின்றன. உதாரணமாக, இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) பயங்கரவாதத்திற்கு நிதியளிக்கும் அபாயத்திற்கு உட்பட்டவையா என்பதைத் தீர்மானிக்க மதிப்பீடுகளை முன்னெடுக்குமாறு FATF அரசுகளிடம் கோருகிறது. இம்மதிப்பீடுகளின் அடிப்படையில், அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதும் பொதுவான கட்டுப்பாடுகளை திணிப்பதற்குப் பதிலாக, அடையாளங்காணப்பட்ட அச்சுறுத்தல் மட்டத்திற்கு ஏற்ப பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட மேற்பார்வை நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட வேண்டும். சட்டப்பூர்வமான இலாபநோக்கற்ற நிறுவனங்களின் (NPOs) செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், "இலக்கினையுடையதாகவும், ஏற்புடையதான அளவுடன் கூடியதாகவும் மற்றும் அபாயத்தின் அடிப்படையிலான" (Targeted, Proportionate, and Risk-Based) கட்டுப்பாடுகளைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை FATF வலியுறுத்துகிறது. இதற்கு மாறாக, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட (CBSL) சுற்றறிக்கைகள், குறிப்பிட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) ஏற்படுத்தும் அபாய தன்மைகள் தொடர்பான மதிப்பீடுகள் எதுவுமின்றி, அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களின் மீதும் பொதுவான நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்றன. இதன் மூலம் இலங்கையிலுள்ள அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் சுயாதீன செயற்பாட்டுக்கு தடைகள் உருவாக்கப்படுகின்றன.

நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) சிறந்த நடைமுறைகளின் தொகுப்பானது (Compilation of Best Practices), பயனாளிகள் பற்றிய விரிவான தரவுகள், நிதிக்கொடையாளர்கள் அல்லது பங்குதாரர் அமைப்புகள் தொடர்பான முழுமையான விவரங்களை வெளிப்படுத்துவதானது பாகுபாடற்ற, மிதமிஞ்சிய மற்றும் அபாய மதிப்பீட்டுடன் (risk-aligned) ஒத்துப்போகாத விதிமுறைகளாகும் என குறிப்பிடுகிறது. இதற்கு மாறாக, தற்போதைய அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGO) அறிக்கை சமர்ப்பித்தல் தரநிலைகளோ பரந்த மற்றும் கடுமையான கட்டுப்பாடுகளைத் திணிக்கின்றன. இவை குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயங்கும் அமைப்புகள் மீதும், நீதி மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் பணியாற்றும் அமைப்புகள் மீதும் கடுமையான மற்றும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இக்குழுக்கள் அடிக்கடி பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையினரின் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன், தொடர்ச்சியான (சட்டத்திற்குப் புறம்பான) கண்காணிப்புகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் முகங்கொடுக்கின்றன.

2023 ஆம் ஆண்டிலிருந்து, இலாபநோக்கற்ற நிறுவனங்களை (NPOs) "கட்டுப்பாட்டு முறையில் நிர்வகித்தல்" (Supervision) என்பதற்குப் பதிலாக, அரசுகள் அவற்றை வெறுமனே "கண்காணித்தல்" (Monitor) அல்லது "மேற்பார்வை" (Oversight) மட்டுமே செய்ய வேண்டும் என நிதி நடவடிக்கை பணிக்குழு (FATF) தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் நிதியியல் நிறுவனங்கள் அல்லது சூதாட்டக் கூடங்கள் (Casinos) போன்று நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு (FIU) சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகள் குறித்துத் தெரிவிக்க வேண்டிய சட்ட ரீதியாக பொறுப்புடன் "அறிக்கையிடும் அமைப்புகளாக" (Reporting Entities) இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPO) வகைப்படுத்தப்படவில்லை என்பதால், இந்த வேறுபாடு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுத்துகிறது. மேலும், அளவுக்கு அதிகமான கட்டுப்பாடுகளைக்

கொண்ட அல்லது தடைகளை ஏற்படுத்தும் ஒழுங்குபடுத்தல் அணுகுமுறைகள், இலாபநோக்கற்ற நிறுவனங்களைப் (NPO) பொருத்தமான முறையில் நடத்துவது தொடர்பான 8 ஆம் இலக்கப் பரிந்துரையை மீறுகின்றன என FATF வழிகாட்டல்கள் குறிப்பிடுகின்றன. பெரும்பாலான இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPO) மேம்பட்ட உள் பாதுகாப்பு வழிமுறைகளைக் கொண்டிருப்பதனாலோ, அல்லது ஏற்கனவே நடைமுறையிலுள்ள ஒழுங்குபடுத்தல் முறைமைகளின் கீழ் இயங்குவதனாலோ அவை மிகக் குறைந்த அபாயத்தையே வெளிப்படுத்துகின்றன என இப்பரிந்துரை உறுதிப்படுத்துகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில், "மேலதிகமான நடவடிக்கைகள் தேவையற்றதாக இருக்கலாம்" என நிதி நடவடிக்கை பணிக்குழு (FATF) குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட 01/2025 ஆம் இலக்கச் சுற்றறிக்கையானது, தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் (VSSO) சட்டத்தின்கீழ் பதிவு செய்யும் நடைமுறையானது அதிகமான நேரத்தை விரயமாக்குவதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இதன் காரணமாக மாற்று அல்லது இடைக்கால உறுதிப்படுத்தல் கடிதமொன்றிற்கான (Alternative/Interim Confirmation Letter) தேவை உருவாக்கப்பட்டுள்ளது. இது கடுமையான மற்றும் மேலதிகமான ஒழுங்குபடுத்தல் முறைமைகளைத் திணிப்பதற்கு எதிரான நிதி நடவடிக்கை பணிக்குழு (FATF) வின் பரிந்துரைகளுடன் முரண்படுகிறது.

மேலும், நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) சிறந்த நடைமுறைகளில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு, பரந்த மற்றும் பொதுப்படையான ஒழுங்குபடுத்தல் முறைமை நடவடிக்கைகள் "நியாயமற்ற ஒட்டுமொத்த அபாய· தவிர்ப்பு (Unjustified wholesale de-risking) நடவடிக்கைகளுக்கு நிதியியல் துறையை இட்டுச்செல்லக்கூடும் என குறிப்பிடுகிறது. இதன் காரணமாக இலாபநோக்கற்ற துறையிலுள்ள நிறுவனங்கள் நிதியியல் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் அதீத சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம்" இதுவே இலங்கையின் தற்போதைய கள நிலவரமாகும். அதாவது இங்கு வங்கிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள "ஒட்டுமொத்த அபாய· தவிர்ப்பு" முறைகள் காரணமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) தங்களது சொந்த நிதிகளைக் கையாள்வதற்கும் அணுகுவதற்கும் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் ஒன்றாக சேர்ந்து, அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) தொழிற்படுவதற்குச் சாதகமற்ற ஒரு கடினமான சூழலை உருவாக்கியுள்ளன. இந் நிலையானது அந்நிறுவங்கள் ஆற்றிவரும் பணிகளையும் அவைகள் மூலம் பயன்பெறும் சமூகங்களையும் நேரடியாகப் பாதிக்கின்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) சந்தேகக் கண்ணோட்டத்துடனே பார்க்கப்படுவதும், அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி முடக்குவதற்கு எண்ணற்ற நடவடிக்கைகள் நடைமுறையிலுள்ள போதிலும், இன்றுவரை பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான எந்தவொரு செயற்பாடுகளில் ஈடுபட்டதாக எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் (NGOs) எதிராக சட்டரீதியான குற்றச்சாட்டுகளோ அல்லது வழக்குகளோ தொடரப்படவில்லை. மாறாக, அரச சார்பற்ற நிறுவனங்களை (NGOs) தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்புடுத்தலாம் என்று மேம்பட்ட பாதுகாப்பு வழிமுறைகளை பிரயோகிப்பதும் (Securitisation) மற்றும் சந்தேகக் கண்ணோட்டத்துடன் அணுகுதலும், கருத்துச் சுதந்திரம், அமைப்புகளை அமைப்பதற்கான உரிமை மற்றும் ஒன்று கூடுவதற்கான உரிமை ஆகிய மக்களின் அரசியலமைப்பின் ஊடாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்துவதுடன், சிவில் சமூகத்திற்கும் அரசிற்கும் இடையிலான நல்லுறவையும் சீர்குலைக்கின்றது.

6. நிதி நடவடிக்கை பணிக்குழு (FATF) தரநிலைகள் அரசுகளால் ஆயுதமயமாக்கப்படுவதால் ஏற்படும் தாக்கங்கள்.

6.1. வங்கிச் சேவைகளை அணுகுவதில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் முடிவுகள்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பணமோசடி/பயங்கரவாத நிதியுதவி தடுப்பு AML/CFT நடவடிக்கைகளின் விளைவாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPO) வங்கிச் சேவைகளை பெற்றுக்கொள்வதில் எதிர்கொண்ட சிரமங்கள் தொடர்பாக ஒரு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இலங்கை முழுவதிலும் உள்ள இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கு (NPOs) இணையவழியில் கட்டமைக்கப்பட்ட, மூன்று மொழிகளையும் உள்ளடக்கிய வினாக்கொத்தொன்று விநியோகிக்கப்பட்டு இலங்கையில் உள்ள அனைத்து மாகாணங்களிலிருந்தும் 102 பதில்கள் பெறப்பட்டன. இந்த ஆய்வில், நிறுவனங்களின் சுயவிவரங்கள், வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் சவால்கள், வங்கிகளின் எதிர்வினைகள் மற்றும் இச்சவால்களைக் எதிர்கொள்வதற்கு இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) கையாளும் உத்திகள் மற்றும் வங்கிச் சேவைகளைப் பெறுவதில் எதிர்கொள்ளும் சவால்களால் ஏற்படும் அனைத்து விதமான பாதிப்புக்கள் போன்றவைகளை ஆராய்ந்தது.

இவ் ஆய்வில் பதிலளித்த அமைப்புகளில் பிரதானமாக மனித உரிமைகள் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, வாழ்வாதார ஆதரவு, மற்றும் சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகள் ஆகிய துறைகளில் பணியாற்றுபவையாகும். இவைகள் பிரதானமாக இன-மத, சிறுபான்மையினர் மற்றும் LGBTIQ குழுக்கள் உள்ளிட்ட விளிம்புநிலை மற்றும் பாதிப்புறும் சமூகங்களுக்குச் சேவையாற்றும் நிறுவனங்களாகும். மேலும் இவ் ஆய்வில் கலந்துகொண்டு பதிலளித்த நிறுவனங்களில் 21% பெண்களால் தலைமைதாங்கப்படும் அமைப்புகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவ் ஆய்வில் கலந்துகொண்ட கிட்டத்தட்ட அரைவாசி நிறுவனங்கள் தேசிய மட்டத்தில் இயங்குகின்றவைகளாகும் அதேவேளை மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானவை சமூக மட்டத்திலான அமைப்புகளாகவும் (CBOs) இலங்கை முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் காணப்படுகின்றன. மேலும் இவ் ஆய்வின் படி வடக்கு மற்றும் கிழக்கில் இயங்குகின்ற நிறுவனங்கள் அதிகமான சவால்களுக்கு முகம்கொடுத்தவைகளாக காணப்படுகின்றன. அத்துடன் இவ் ஆய்வில் கலந்துகொண்ட பெரும்பாலான அமைப்புகள் இருபது பேர் வரையிலான முழுநேரப் பணியாளர்களைக் கொண்டவைகளாகவும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுமாகும்.

இவ் ஆய்வில் பங்கேற்றோர் அனைவரும் நிதியியல் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் ஒன்றையொன்று பிணைந்த, பலதரப்பட்ட தடைகளை எதிர்கொண்டதாக இவ்வாய்வுக்கான பதில்கள் வெளிப்படுத்துகின்றன:

- பதிலளித்தவர்களில் கிட்டத்தட்ட 50% அமைப்புகள் புதிய வங்கிக் கணக்குகளைத் திறப்பதில் சிரமங்களை எதிர்கொண்டன.
- கணிசமான அளவினர் அதாவது 69% நிறுவனங்கள் வெளிநாட்டு நிதிகளைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர்கொண்டன. இவற்றுள் குறைந்தபட்சம் 42% நிறுவனங்களுக்கு, வெளிநாட்டு நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகதில் பதிவு செய்யுமாறு வங்கிகளால் அறிவுறுத்தப்பட்டது.
- 37% நிறுவனங்களிடம் பரிவர்த்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.
- 32% அமைப்புகள் வங்கிப் பரிவர்த்தனை தாமதங்களை எதிர்கொண்டதுடன், 22% நிறுவனங்கள் நிதியை வைப்புச் செய்வதிலோ அல்லது மீளப் பெறுவதிலோ சிரமங்களை எதிர்கொண்டன.
- 17% நிறுவனங்கள் மட்டுமே எவ்வித சிக்கல்களையும் எதிர்கொள்ளவில்லை.

பதிலளித்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு (54%) இக்கட்டுப்பாடுகளுக்கான காரணங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், அளிக்கப்பட்ட விளக்கங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் கொண்டவையாகவும், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) சுற்றறிக்கைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகதில் பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகளை மட்டுமே சுட்டிக்காட்டுபவையாகவும் அமைந்திருந்தன.

பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, நிதிக்கொடையாளர்கள், செயற்திட்ட நடவடிக்கைகள் அல்லது நிதி பயன்படுத்தப்படும் முறை குறித்த மேலதிக ஆவணங்களையோ அல்லது சான்றுகளையோ சமர்ப்பிக்குமாறு இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், அமைப்பின் கொள்கை மற்றும் நிதிசார் கொள்கை ஆவணங்களை மீண்டும் மீண்டும் கோருவது உள்ளிட்ட பல்வேறு சிரமங்களைச் சந்தித்ததாக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் (CBSL) அழுத்தத்தை காரணம் காட்டி, வங்கிகள் ஏற்புடையதற்ற மற்றும் சட்டத்திற்குப் புறம்பான தேவைப்பாடுகளைத் திணிக்கும் நடைமுறையைக் கொண்டுள்ளதை இப்பதில்கள் வெளிப்படுத்தின. இதன்மூலம் இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) பின்வரும் விளைவுகளை எதிர்கொண்டன:

- **45% இலாபநோக்கற்ற நிறுவனங்கள், நிதிக்கொடையாளர்கள் அல்லது செயற்திட்டத்தை உரிய காலத்திற்குள் செயல்பட முடியாமல் போனதாகத் தெரிவித்தன.**
- **37% நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கான சம்பளங்களை வழங்குவதில் சிரமங்களை எதிர்கொண்டதுடன் தமது பணியாளர்களைப் பணிநீக்கம் செய்யவும் நிர்பந்திக்கப்பட்டன. அதேவேளை 31.5% நிறுவனங்கள் தங்களது நிறுவன நற்பெயருக்குக் களங்கம் (Reputational damage) ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளன.**
- **29% நிறுவனங்கள், இந்தத் தாமதங்கள், தங்களின் மூலம் பயனடையும் மக்களுக்குச் சேவை செய்வதை நேரடியாகப் பாதித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளன.**

இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) கையாளும் உத்திகள் தொடர்பில்:

- **43% நிறுவனங்கள் இவ்வகையான சட்டங்களை பின்பற்ற வேண்டும் என்பதற்காக (Compliance demands) அதிக நேரத்தைச் செலவிடுவதாகப் பதிவு செய்துள்ளன. மேலும் 21% நிறுவனங்கள் தங்களது செயற்திட்டங்களைத் தீர்மானிப்பதாகத் தெரிவித்துள்ளன.**
- **ஏனைய நிறுவனங்கள் வங்கிகளை மாற்றுதல், வங்கி முகாமையாளர்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துதல் அல்லது போதுமான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் போன்ற வழிகளைப் பின்பற்றின.**

6.2. விடய ஆய்வுகள்- சிவில் சமூகத்துடனான பண்புசார் நேர்காணல்கள் (qualitative interviews)

இந்த விடய ஆய்வுகள் (case studies) நேர்காணல் செய்யப்பட்டவர்களின் வார்த்தைகளிலேயே நேரடியாகத் தரப்பட்டுள்ளன.

விடய ஆய்வு 1

CSO அமைப்பின் அமைவிடம்: **மேல் மாகாணம், இலங்கை**

செயற்படும் பிரதேசம்: **தேசிய மட்டம் – சேவை கிடைக்கபெறாத சிறுபான்மைச் சமூகங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துதல்.**

பணி நோக்கமும் களமும்: **மனிதநேய மற்றும் அனர்த்த நிவாரண நடவடிக்கைகள், சுகாதாரம் மற்றும் சமூகப் பராமரிப்பு, இளைஞர் வலுவூட்டல் மற்றும் கல்வி.**

இரு தசாப்தங்களுக்கும் மேலாக, நாங்கள் வங்கிக் கணக்குகளைப் பராமரித்து வருவதுடன், உத்தியோகபூர்வ நிதிக்கொடை ஒப்பந்தங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட வங்கி செயற்பாடுகள் ஊடாகவே எமது நிதியுதவிகளைப் பெற்று வருகிறோம். நாங்கள் வங்கி ஒன்றில் கணக்கை திறப்பதற்கு எவ்விதமான கஷ்டங்களையும் படவில்லை, மாறாக நிதிகள் பெறப்பட்ட பின்னர் அவற்றை பெற்றுக்கொள்வதற்கே மிகவும் கடினமாக இருந்தது. வெளிநாட்டு நிதிக்கொடைகள் (Foreign Remittances) வரும்போதெல்லாம், தாமதங்களும் திரும்பத் திரும்ப ஆவணங்களைக் கோரும் கெடுபிடிகளும் ஏற்படுகின்றன. எமது அமைப்பில் பல வருடங்களாக எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றங்களும் இல்லாத நிலையிலும், "வாடிக்கையாளரை அறிந்துகொள்ளல்" (KYC) விபரங்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்குமாறு எங்களிடம் கேட்கின்றனர். "ஒரு குறுகிய காலத்தில் ஒரு அமைப்பின் விவரங்கள் எத்தனை முறை மாற முடியும்?" என்று நான் அப்போது கேள்வியெழுப்பினேன். இத்தகைய கேள்விகளை எழுப்புவதே ஒரு பிரச்சினையாக மாறுகிறது. ஒரு வங்கியுடன் நாங்கள் எதிர்கொண்ட சிரமங்கள் காரணமாக, இறுதியில் எமது வெளிநாட்டு நிதியினை கையாளும் கணக்கை வேறொரு நிறுவனத்திற்கு மாற்றினோம். ஏனைய வங்கிகள் தங்களின் அணுகுமுறையில் நட்புடன் நடந்துகொள்வது போல் தோன்றினாலும், நிதிக்கொடை ஒப்பந்தம், நிதிகள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதற்கான விளக்கங்கள் மற்றும் செயற்திட்ட பயனாளிகளின் விபரங்களைக் கோரும் கோரிக்கைகளை நாங்கள் தொடர்ந்து எதிர்கொள்கிறோம். எங்களுடன் நீண்டகாலம் பணியாற்றிய பின்னரும், எமது நிதிக்கொடையாளர்கள் மற்றும் எமது செயற்பாடுகளின் தன்மை குறித்து வங்கிகள் சிறந்த புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த சோதனைகளின் தீவிரமானது நிதிக்கொடைகளின் அளவினை பொறுத்து அதிகரிப்பதாகத் தெரிகிறது. நாங்கள் பெரிய நிதிக்கொடைகளைப் பெரும்போதெல்லாம், ஒரு உள்ளூர் நிறுவனமானது எவ்வாறு வெளிநாடுகளிலிருந்து இவ்வளவு பெரிய நிதிக்கொடையைப் பெற முடியும் என்ற கேள்விகள் உடனடியாக எழுகின்றன. வங்கிகள் பணமோசடி தடுப்பு அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கு எதிரான (AML/CFT) கொள்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்களின்படியே செயல்படுகின்றன, ஆனால் அவர்களுக்கு அது குறித்துச் சரியான புரிதல் இல்லை என்றே நாங்கள் உணர்கிறோம்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து, பரிசீலனை மற்றும் கண்காணிப்பின் அளவு கணிசமான அளவில் அதிகரித்தது. பாதுகாப்பு முகவர் நிலையங்கள் எமது நடவடிக்கைகள் மற்றும் பயனாளிகள் குறித்து தீவிர கவனம் செலுத்தத் தொடங்கின. பயனாளிகள் தொடர்பான தகவல்கள் "அவர்கள் உண்மையாகவே தகுதியான மனிதர்களா" என்பதைச் சரிபார்ப்பதற்காகப் பிரதேச செயலகங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் உள்ளிட்ட அரச அதிகாரசபைகளுடன் சரிபார்க்கப்பட்டு, ஒப்பிட்டு ஆய்வு (Cross-referenced) செய்யப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து கடினமான காலங்களில், நாங்கள் ஏற்கனவே எமது பணிகளில் பெரும்பாலானவற்றை மந்தப்படுத்தி, பல சவால்களை எதிர்கொண்டிருந்த நிலையிலும், தீவிரமான கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்படுவதாகவே உணர்ந்தோம். நிதிப் பரிவர்த்தனைகளில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை நான் முழுமையாக ஆதரிக்கும் அதே வேளையில், FATF தொடர்பான தேவைகள் உண்மையான நிதியியல் குற்ற அபாயங்களை உரையாடுவதை விட, சிவில் சமூக அமைப்புகளைக் CSOs கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஒரு சாதனமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்றே நான் நம்புகிறேன்.

எனது பார்வையில், பணமோசடி தடுப்பு அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கு எதிரான (AML/CFT) நடவடிக்கைகளுக்கும் அப்பால் ஏதோ ஓர் தொடர்ச்சியாக விரிவடையும் ஒரு பரந்த பிரச்சினையும் இங்கு உள்ளது. ஒரு சிறுபான்மையினரால் தலைமைதாங்கப்படும் அமைப்பு என்ற வகையில், நாங்கள் மற்றவர்களை விட அதிகளவிலான சந்தேகத்துடனேயே பார்க்கப்படுகிறோம் என்று அடிக்கடி உணர்கிறோம். பரிசீலனை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதில் இன அல்லது மத அடையாளம் ஒரு காரணியாக மாறும் சந்தர்ப்பங்கள் உள்ளன. எமது நிதியுதவிகள் கிட்டத்தட்ட முழுமையாக சட்டப்படி நிறுவப்பட்ட நிதிக்கொடை வழங்கும் அமைப்புகளிடமிருந்து சட்டப்பூர்வமான வங்கி வழிகளினூடாகவே வருகின்றன என்பதும், அவை அபிவிருத்தி மற்றும் மனிதநேய நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நடைமுறைகள் நடைமுறைச் சாத்தியமானதாகவும் அபிவிருத்தியை மையமாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஆனால் தற்போதைய நிலையில், இத்தடைகள் எங்களைப் போன்ற நிறுவனங்களுக்குப் பொறுப்புக்கூறலுக்கு ஆதரவளிப்பதை விட, எங்களைப் பின்னோக்கி இழுப்பதாகவே உணரமுடிகிறது.

விடய ஆய்வு 2

CSO அமைப்பின் அமைவிடம்: **வட மாகாணம், இலங்கை**

செயற்படும் பிரதேசம்: **வட மாகாணம், கிழக்கு மாகாணம்**

பணி நோக்கமும் களமும்: **பொறுப்புக்கூறல், நீதி, மனித உரிமைகள், அரசியலமைப்புச் சீர்திருத்தம் மற்றும் சமூக–பொருளாதார நீதி.**

அரசுக்கு எதிராக நாங்கள் தொடுத்த சட்டப் போராட்டத்துடன் ஒத்துப்போகும் வகையில், 2018 - 2019 காலப்பகுதியில் எங்கள் மீதான தீவிரமான பரிசீலனையும் கண்காணிப்பும் தொடங்கியது. சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் அரச பொறுப்புக்கூறல் தொடர்பான உயர்நிலையான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபடும்போதெல்லாம் வங்கியுடன் தொடர்பான சவால்கள் தீவிரமடைகின்றன. அன்றிலிருந்து இந்த நெருக்கடிகள் நிற்கவில்லை. ஒரு கட்டத்தில் எங்களிடம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பதிவுச் சான்றிதழ் இல்லை என்பதால் எங்களது அனைத்துப் பரிவர்த்தனைகளையும் வங்கி முடக்கியது, அதனால் நாங்கள் அவ்வங்கியை விட்டே விலக நேரிட்டது. மேலும் அவ்வங்கியில் எவ்வித நெகிழ்வுத்தன்மையும் இருக்கவில்லை என்பதுடன் மேலதிக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் வரை அனைத்து நிதியியல் நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்பட்டன.

நாங்கள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியாகவே (Company Limited by Guarantee) பதிவு செய்யப்பட்டுள்ளோமே தவிர, அரச சார்பற்ற நிறுவனமாக (NGO) ஆக அல்ல என்பதால் நாங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் வரமாட்டோம் என்பதை விளக்கி எண்ணற்ற கடிதங்களையும் மின்னஞ்சல்களையும் அனுப்பியுள்ளோம். "மேலதிகாரிகள்" இவற்றுக்கு அழுத்தம் கொடுப்பதால் தங்களால் எதுவும் செய்ய முடியாது எனச் சில வேளைகளில் வங்கி கிளையின் பணியாளர்கள் கூறினர். பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காலங்களில் கூட, பரிவர்த்தனைகளை முன்னெடுக்க முடியாததால் பல சந்தர்ப்பங்களில் எங்களது மனித உரிமைப் பணிகளை இடைநிறுத்த நேரிட்டது. ஒருமுறை நிதிக்கொடையாளர் ஒருவர் நிதியை அனுப்பியபோது, அது கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிட்டதாக நாங்கள் கருதியிருந்தோம் இருப்பினும் அந்நிதியை எங்களுக்குத் தெரிவிக்காமலேயே வங்கி கிட்டத்தட்ட ஒரு வருடமாக முடக்கி வைத்திருந்தது. மேலும் வங்கியானது செயற்திட்டத்தின் இரகசியத் தரவுகளை வழங்காவிடின் நிதியைத் திரும்ப அனுப்பிவிடுவோம் என எங்களுக்கு இறுதி எச்சரிக்கை (Ultimatum) விடுத்தது. மூன்றாம் தரப்பினருக்கு இரகசியத் தகவல்களையோ வெளிப்படையான செயற்திட்ட ஆவணங்களையோ வழங்க நாங்கள் விரும்பாததால், பணத்தைத் திரும்ப அனுப்பிவிடுமாறு அவர்களிடம் கூறிவிட்டோம். ஒரு சாதாரண பரிவர்த்தனையை முன்னெடுப்பதற்கு இரகசியமான செயற்திட்ட விபரங்களை ஒப்படைக்க வேண்டும் என்று எந்தவொரு வங்கிச் சட்டமும் கூறாததால், நாங்கள் எங்கள் முடிவில் உறுதியாக நின்றோம்.

நிதிக்கொடையாளர்களுடன் நமக்கு பலமான உறவு இருந்தால், அவர்கள் இந்த அபாயங்களைப் புரிந்து கொண்டு, வங்கிகளுடன் நாங்கள் பகிர்ந்துகொள்ளக்கூடிய வகையில் "தொகுக்கப்பட்ட" (Redacted) ஒப்பந்த ஆவணங்களை வழங்குவது போன்ற மேலதிக நடவடிக்கைகளை எடுக்க முன்வருகிறார்கள்.

ஆனால் அனைத்து நிதிக்கொடையாளர்களும் அவ்வாறு இருப்பதில்லை. இப்பிரச்சினைகள் காரணமாக சில நிதிக்கொடையாளர்கள் எங்களுக்கு நிதியளிக்க முடியாது என்று கூறிவிட்டனர். வங்கி அமைப்பில் எங்களது செயற்திட்ட நிதிகள் பல மாதங்களாக முடக்கப்படுவதால், எங்களது சர்வதேச நிதிக்கொடையாளர்களிடம் மேலதிகமான செலவில்லாத கால நீடிப்புகளைக் (No-cost extensions) கேட்க நாங்கள் தொடர்ந்து நிர்பந்திக்கப்படுகிறோம். இது எங்களது செயற்திட்ட கால வரையறைகளை சீர்குலைப்பதுடன், ஊழியர்களின் பணிவிலகலுக்கும் வழிவகுப்பதுடன் மீண்டும் பயிற்சி வழங்கி புதிய குழுக்களை உள்வாங்குவதற்கு அதிகமான நேரங்கள் மற்றும் ஆற்றல்கள் தேவையாக உள்ளது. மேலும் எங்களது கணக்காய்வாளர்கள் வெவ்வேறு திட்டங்களுக்கு வெவ்வேறு கணக்குகளைப் பராமரிக்குமாறு கேட்கிறார்கள் ஆனால் தற்போதைய கட்டுப்பாடுகளின் கீழ், புதிய வங்கிக் கணக்குகளைத் திறப்பது மிகவும் கடினமாக உள்ளது.

நாங்கள் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதாக அச்சுறுத்தும்போது, வங்கி அதிகாரிகள் பின்வாங்குகிறார்கள். தங்களுக்கு ஆதரவாக நிற்கச் சட்டரீதியான நியாயங்கள் எதுவுமில்லை என்பதை அவர்கள் அறிந்துள்ளதால், எதையும் எழுத்துப்பூர்வமாக வழங்குவதில்லை. தங்களது கோரிக்கைகளுக்கு எவ்வித ஆதாரமும் இருக்கக்கூடாது என்பதற்காக அவர்கள் தொலைபேசி உரையாடல்கள் மூலமாகவே தொடர்புகொள்கிறார்கள். மேலும் மக்களைப் பயமுறுத்துவதற்காகவே, அரசு வேண்டுமென்றே கடினமான நிதி மற்றும் சட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தும் தந்திரத்தைக் கையாளுறது. பரிவர்த்தனைகளை முடக்குவதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் சரியான சட்ட விதிகளை எழுத்துப்பூர்வமாக விளக்குமாறு வங்கி முகாமையாளரிடம் நாங்கள் கோரத் தொடங்கியதும், அவர்களின் அணுகுமுறை மாறியது இவை வங்கியினால் சட்டத்திற்குப் புறம்பாகச் சுமத்தப்படும் தேவைகள் (Extra-legal requirements) என்பதையே இது காட்டுகிறது. ஒரு முக்கியமான நிகழ்ச்சியை நாங்கள் நடத்தும்போதெல்லாம், இந்தத் திடீர் வங்கிச் சிக்கல்கள் ஏன் ஏற்படுகின்றன என எண்ணி நாங்கள் வியப்படைகிறோம். எங்களது கொள்கைகளே அரசை ஆத்திரப்படுத்துவது போல் தோன்றுகிறது. நாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக ஒருபோதும் உணர்வதில்லை.

இந்த முடிவில்லாத நிர்வாகக் கெடுபிடிகள் எங்களது குழுவின் மீது ஏற்படுத்தும் நேரம், ஆற்றல் மற்றும் உணர்வுரீதியான பாதிப்புகள் பற்றிப் பேசப்படுவதில்லை. ஒரு கட்டத்தில், அமைப்பை முற்றிலுமாக மூடிவிடலாம் என்று கூட யோசித்தோம்.

ஒவ்வொரு தொலைபேசி அழைப்பும், மின்னஞ்சலும், சந்திப்பும் அரச உளவுத்துறையால் கண்காணிக்கப் படுகிறது என்ற அனுமானத்தின் கீழேயே நாங்கள் செயல்படுகிறோம். அந்தத் தொடர்ச்சியான விழிப்புணர்வே எங்களது குழுவைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவிய ஒரே வழியாகும். இவ்வாறு வாழ்வதும் பணியாற்றுவதும் மனச்சோர்வளிக்கிறது. எங்களிடம் மறைப்பதற்கு எதுவுமில்லை, அவர்கள் எப்போது வேண்டுமானாலும் எங்களது அலுவலகத்திற்கு வந்து பொது ஆவணங்களைக் பரிசோதனை செய்யலாம். ஆனால் குற்றப்புலனாய்வுத் துறையின் (CID) இந்த ஒருங்கிணைக்கப்பட்ட கெடுபிடிகளும் அச்சுறுத்தல்களும், தன்னிச்சையான வங்கித் தடைகளுடன் சேரும்போது, சுதந்திரமான சிவில் சமூக தளத்தினை ஒடுக்குவதற்கான அரசின் உத்தியாகவே கருதப்படுகிறது.

ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளைத் தாக்கல் செய்யும் முழுமையான வெளிப்படையான அமைப்பாக இயங்குவதற்காகவே, நாங்கள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்தோம். பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரும் (TID) குற்றப்புலனாய்வுத் துறையினரும் (CID) விசாரணைப் புலனாய்வுகளின் போது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்யுமாறு வாய்மொழி மூலமாக எங்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

இந்தச் சூழல் சிவில் சமூகத்திற்குள் ஒரு ஆபத்தான படிநிலையை (Hierarchy) உருவாக்குகிறது. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பதிவைக் கொண்டுள்ள பெரிய, செல்வாக்குமிக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) சர்வதேச நிதிகளை எளிதாகப் பெற முடிகிறது. அதேவேளை சிறிய, அடிமட்ட அளவிலான அமைப்புகள் (Grassroots) பாதகமான நிலைக்குத் தள்ளப்படுகின்றன. பின்னர், இந்த பெரிய அமைப்புகளிடம் நிதியியல் ரீதியாக அடிபணியவும், சிறிய அளவிலான உள்ளூர் பகுதி அளவிலான - நிதிக்கொடைகளுக்காக (Sub-grants) அவற்றைச் சார்ந்திருக்கவும் நாங்கள் கட்டாயப்படுத்தப்படுகிறோம். இது சமூக அமைப்புகளின் நிதியியல் சுதந்திரத்தைப் பறித்து, அவர்களின் கொள்கை வாதிடலை பலவீனப்படுத்துவதுடன், ஏதோ ஒருவகையில் செயற்படுவதற்காக மட்டுமே பெரிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு (NGO) கட்டுப்பட்டு நடக்கும் நிலைக்குத் தள்ளுகிறது.

விடய ஆய்வு 3

CSO அமைப்பின் அமைவிடம்: **மேல் மாகாணம், இலங்கை**

செயற்படும் பிரதேசம்: **தேசிய மட்டம்**

பணித் துறைகள்: **இலங்கையில் பால்பல்வகைமை (LGBTQIA+) நபர்களுக்கான சம உரிமைகள், சட்டம் பாதுகாப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கொள்கைகளை (Inclusion) முன்னெடுத்தல்.**

எங்களது அமைப்பு வங்கிக் கணக்குகளைத் திறப்பதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளது. இச்சவால்கள் ஒரு பால்பல்வகைமை (LGBTQIA+) அமைப்பு என்ற எங்களது அடையாளத்துடன் பிணைக்கப்பட்டுள்ளதாக நாங்கள் நம்புகிறோம். தற்போது நாங்கள் இரண்டு வங்கிகளில் கணக்குகளைப் பராமரித்து வருகின்ற போதிலும், அவற்றில் ஒன்றினால் மட்டுமே வெளிநாட்டு நிதிக்கொடைகளைப் (Foreign Remittances) பெற முடிகிறது. பல வங்கிகள் தெளிவான காரணங்களை வழங்காமல் எங்களது ஆரம்ப விண்ணப்பங்களை நிராகரித்தன. கணக்குகள் திறக்கப்பட்ட பின்னரும் கூட எங்களது சட்டப்பூர்வ நிலை, பதிவு மற்றும் பால்பல்வகைமை (LGBTQIA+) சமூகங்களுடனான எங்களது பணிகள் குறித்து மேலதிக பரிசீலனைகளுக்கு நாங்கள் முகம்கொடுத்தோம்.

வெளிநாட்டு நிதியைப் பெறுவதற்கான நிபந்தனையாக, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்திருக்க வேண்டும் என எங்கள் வங்கிகளுள் ஒன்று கேட்கத் தொடங்கியபோதே மிகவும் கடுமையான சிரமங்கள் ஏற்பட்டன. அறக்கட்டளையாக (Trust) சட்டப்பூர்வமாக இயங்கி வந்தபோதிலும், அதிகமான ஆவணங்களைச் சமர்ப்பித்தபோதிலும், இறுதியில் அவ் வங்கி நிதிக்கொடையாளரின் நிதியைத் திருப்பி அனுப்பியதுடன், எங்களது கணக்குகள் மூலமாக வெளிநாட்டுப் பரிவர்த்தனைகள் மேற்கொள்வதையும் நிறுத்தியது. இதன் விளைவாக, நாங்கள் அரச சார்பற்ற நிறுவன (NGO) பதிவிற்கு விண்ணப்பிக்க நிர்பந்திக்கப்பட்டோம். ஆனால் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும், பாதுகாப்பு அமைச்சிடம் (MOD) இருந்து அனுமதி கிடைக்காத காரணத்தால், எங்கள் விண்ணப்பம் இன்னும் நிலுவையில் (pending) உள்ளது. இந்தச் செயல்பாட்டின் போது, எங்கள் அலுவலகங்கள், செயற்திட்டங்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் (NGO Secretariat) அதிகாரிகள், குற்றப் புலனாய்வுத் துறையினர் (CID), உளவுத்துறை முகவர்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் அதிகாரிகள் ஆகியோரால் கண்காணிப்பிற்கும் தொடர் ஆய்வுகளுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

அரச சார்பற்ற நிறுவன NGO பதிவிற்காகத் தங்களது விபரங்களைப் பகிர்வதற்குச் சில பணியாளர்கள் பயந்தனர். பணியாளர் ஒருவர் பால்பல்வகைமை (LGBTQIA+) அமைப்பில்தான் பணியாற்றுகிறார் என்பது அவரது பெற்றோருக்குத் தெரியாத நிலையில், இரண்டு பொலிஸ் அதிகாரிகள் அவரது வீட்டிற்குச் சென்றனர். அப்பொலிஸ் அதிகாரிகள் அப்பணியாளரின் பணியைப் பற்றிக் கேள்விகள் எழுப்பியதுடன் LGBTIQ நபர்கள் குறித்து எதிர்மறையான கருத்துக்களையும் தெரிவித்தனர்.

ஒரு சந்தர்ப்பத்தில், பொலிஸ் அதிகாரி ஒருவர் எவ்வித முன்அறிவிப்புமின்றி எங்களது தலைமை அலுவலகத்திற்கு வர முயன்றார் அது பதிவுச் செயல்முறையின் ஒரு பகுதி என அவர் வற்புறுத்தினார். எங்களது பணியாளர்களின் வீடுகளுக்குத் தனிப்பட்ட முறையில் விஜயம் செய்வது உட்பட, அந்த அதிகாரியிடமிருந்து பொருத்தமற்ற மற்றும் தொழில்முறையற்ற கோரிக்கைகளும் வந்தன. நாங்கள் பயிற்சிகளை நடத்தும் விடுதிகள் மற்றும் நிகழ்விடங்கள் எங்களது செயற்திட்டங்களின் விபரங்கள், அமைப்பின் பெயர், நேரம் மற்றும் பங்கேற்பாளர் விபரங்கள் போன்றவைகளை உள்ளூர் பொலிஸாருக்கு அறிக்கையிட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டது.

பால்பல்வகைமை (LGBTQIA+) சமூகங்களுடன் இயங்கும் ஒரு அமைப்பு என்ற வகையில், எங்களது பணியாளர்கள் பலர் தங்களது வாழ்வாதாரத்திற்கு இந்த வேலையையே முழுமையாக நம்பியுள்ளனர். பணியாளர்களின் சம்பளம், வாடகை மற்றும் அடிப்படை செலவுகளை உறுதிசெய்வது எனது பொறுப்பாகும்.

சில நிதிக்கொடையாளர்கள் மிகவும் புரிதலுடனும் நெகிழ்வுத்தன்மையுடனும் இருந்தனர். ஆனால் ஏனைய நிதிக்கொடையாளர்கள் தொடர்ச்சியான வங்கித் தடைகள் மற்றும் தாமதங்கள் காரணமாகக் கரிசனைகளையும் சந்தேகங்களையும் வெளிப்படுத்தினர். மேலும் பணத்தை எங்களது கணக்கில் சேர்க்க முடியாது என்றால், அந்த நிதியை நிதிக்கொடையாளர்களுக்கே திருப்பி அனுப்பிவிட்டு அதற்கான குறிப்பு எண்ணை (reference) எனக்கு வழங்குமாறு வங்கியிடம் கூறினேன் அப்பொழுதுதான் நாங்களும் நிதிக்கொடையாளர்களுக்குத் தகவல் தெரிவிக்க முடியும். ஆனால் வங்கி அதனை மிகவும் காலதாமதப்படுத்தியது. இது குறித்த விவரங்களை நிதிக்கொடையாளர் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார், இறுதியில் இந்த பிரச்சினைகள் காரணமாக எங்களோடு இணைந்து பணியாற்றுவதையே நிறுத்திவிட்டார். மேலும், வங்கிப் பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றுகொண்டிருந்த அதே வேளையில் ஒப்பந்த காலங்கள் முடிவடைந்ததால், பல நிதி உதவியைப் பெறும் வாய்ப்புகளையும் நாங்கள்

இழந்தோம். நிதிச் சேவைகளைப் பயன்படுத்த முடியாத காரணத்தினால், குறைந்தபட்சம் இரண்டு திட்டங்களையாவது பாதியிலேயே நிறுத்த வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது.

எங்களது அனுபவத்தின் அடிப்படையில், சிவில் சமூக அமைப்புகளுக்கு (CSOs) இணக்கப்பாட்டுத் தேவைகளை (Compliance requirements) வங்கிகள் நடைமுறைப்படுத்துவதில் நிலையான தன்மை இல்லை. வெவ்வேறு வங்கிகளும், ஒரே வங்கியின் வெவ்வேறு கிளைகளும் கூட அரச சார்பற்ற நிறுவன (NGO) பதிவு மற்றும் வெளிநாட்டு நிதிக்கான அணுகல் தொடர்பில் வெவ்வேறு தரநிலைகளையே பயன்படுத்துகின்றன.

விடய ஆய்வு 4

CSO அமைப்பின் அமைவிடம்: **மேல் மாகாணம், இலங்கை**

செயற்படும் பிரதேசம்: **வட மாகாணம், கிழக்கு மாகாணம், வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம்**

பணித் துறைகள்: **நல்லாட்சி, பெண்கள் வலுவூட்டல், நல்லிணக்கம் மற்றும் நீதி, மற்றும் சமூக அரசியல் ஈடுபாடு**

கடந்த இருபத்திரண்டு வருடங்களாக நாங்கள் இவ்வங்கியுடன் உறவைப் பேணி வருகிறோம். தற்போது ஐந்து அல்லது ஆறு கணக்குகளைப் பராமரிக்கிறோம். கடந்த காலத்தில், ஒவ்வொரு முறை நிதித் தொகை வரும்போதும், குறிப்பிட்ட திட்டத்திற்காகக் குறிப்பிட்ட நிதிக்கொடையாளர்களிடமிருந்து நிதி கிடைத்துள்ளது என்றும், அந்த நிதி குறித்த செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டு வங்கிக்கு ஒரு கடிதம் அனுப்பினாலே போதுமானதாக இருந்தது. இருப்பினும், 2019 ஆம் ஆண்டளவில் நிலைமைகள் மாறத் தொடங்கின. நாங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்துள்ளோமா என்று வங்கி கேட்கத் தொடங்கியது. நாங்கள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட இலாபநோக்கற்ற கம்பனியாகவே (Non-profit company limited by guarantee) இயங்குகிறோம். அக்காலப்பகுதியில் எங்களது பணிப்பாளர் சபை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகப் பதிவை நாங்கள் முன்னெடுக்க வேண்டுமா என்பது குறித்து விவாதித்து வந்தது. நாங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்துடன் ஒரு சந்திப்பை நடத்தினோம் அங்கு அவர்கள் LGBTQI குழுக்களுடனோ அல்லது அரசியல் சார்ந்த மனித உரிமைப் பணிகளிலோ ஈடுபட வேண்டாம் என்று எங்களிடம் கூறினர். அந்த அனுபவத்தைத் தொடர்ந்து, பதிவு செய்ய வேண்டாம் என்று நாங்கள் முடிவு செய்தோம்.

2019 முதல், வங்கி ஒவ்வொரு ஆண்டும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் (NGO Secretariat) பதிவு குறித்துத் தொடர்ந்து கேட்டு வருகிறது. இப் பிரச்சினை எவ்வளவு தீவிரமடைந்துள்ளது என்றால், இப்போது எங்களது கணக்காய்வாளர்களின் நிர்வாக அறிக்கையில் (Auditors' Management Letter) இது ஒரு தொடர்ச்சியான அவதானிப்பாக இடம்பெறுகிறது. சட்டத்தின் கீழ், நாங்கள் இலாபநோக்கற்ற கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளோம் என்றும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் (NGO Secretariat) செயலகப் பதிவைப் பெற வேண்டிய கட்டாயமில்லை என்றும் நாங்கள் பலமுறை பதிலளித்துள்ளோம். இருப்பினும், வங்கிகள் இதை எதிர்பார்ப்பதால், இந்தச் சான்றிதழ் இல்லையெனில் விதிமுறைகளுக்கு இணங்குவதில் (compliance) சிக்கல் ஏற்படும் என்பதே கணக்காய்வாளரின் (auditor) நிலையாக உள்ளது. இதனால் நிதிக்கொடையாளர்களுடனும் சிரமங்கள் உருவாகியுள்ளன. ஏனெனில் அவர்களுள் சிலர் வங்கி முகாமையாளரின் கடிதத்தை (management letter) மதிப்பாய்வு செய்து, இலங்கையில் எங்களால் சரியாக இயங்க முடியுமா என்பது குறித்துக் கேள்விகளை எழுப்புகின்றனர்.

2023 ஆம் ஆண்டில், முதன்முறையாக எங்களது நிதிகள் நிறுத்தி வைக்கப்பட்டது. நாங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்யப்படாததால், நாங்கள் பதிவு செய்யும் வரை அல்லது பதிவை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம் என்பதற்கான ஆதாரத்தை வழங்கும் வரை நிதியை வரவு வைக்க முடியாது என்று வங்கி அதிகாரி ஒருவர் எங்களுக்குத் தெரிவித்தார். எந்தச் சட்டத்தின் அடிப்படையில் இதை எதிர்பார்க்கிறீர்கள் என்று நாங்கள் வங்கியைக் கேள்வி கேட்டோம் தேவைப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். நாங்கள் அவ்வாறு செய்த உடனேயே, அந்த நிதி விடுவிக்கப்பட்டது. அன்றிலிருந்து, ஒரு தவணை நிதி வரும்போதெல்லாம் ஒரு கடிதத்தை வழங்கும் அதே வழமையான நடைமுறையையே நாங்கள் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறோம் இருப்பினும், வங்கியின் நிலைப்பாடு மீண்டும் மாறுமோ என்ற நிச்சயமற்ற தன்மை எப்போதும் நிலவுகிறது.

சிறிது காலத்திற்கு முன்பு, நாங்கள் மற்றொரு கணக்கைத் திறக்க முயன்றபோது, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு தேவை (NGO Secretariat) என்று வங்கி எங்களுக்குத் தெரிவித்தது. எங்களிடம் ஏற்கனவே கம்பனிப் பதிவு இருப்பதை நாங்கள் சுட்டிக்காட்டியபோது, அது குறிப்பாக அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான (NGO) பதிவாகவே இருக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். அத்தேவைப்பாட்டை எழுத்துப்பூர்வமாக வழங்குமாறு நாங்கள் கேட்டபோது, அவர்கள் மறுத்துவிட்டனர். மிக அண்மையில், நாங்கள் மற்றொரு வங்கிக் கணக்கைத் திறக்க முயன்றோம் வங்கி விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக்கொண்டது எனக்கு ஆச்சரியமளித்தது. ஆனால் இன்றுவரை

அவர்கள் கணக்கைத் திறக்கவில்லை. மூன்று மாதங்கள் கடந்துவிட்டன, அவர்கள் இன்னமும் "அதற்கு நேரம் எடுக்கிறது" என்றே சொல்கிறார்கள். எனவே இதில் எவ்வித நிலையான தன்மையும் இல்லை.

கண்காணிப்பு குறித்த அச்சங்கள் காரணமாக நாங்கள் எங்களது நிதி ஆதாரங்களைத் திட்டமிட்டே வரம்பிற்குட்படுத்தியுள்ளோம் அத்துடன் எங்கள் மாவட்டக் குழுக்களிடம் குற்றப் புலனாய்வுத் துறையினர் (CID) விசாரணை நடத்தினார்கள். எனவே, பல ஆண்டுகளாக நாங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் முகமைகள் மற்றும் சட்டரீதியாக நிறுவப்பட்ட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து மட்டுமே நிதியைப் பெற்றுவந்தோம் ஏனெனில் அந்த நிறுவனங்கள் பரவலாக அங்கீகரிக்கப்பட்டவை. மேலும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் (TID) என்னிடம் விசாரணை நடத்தியபோது, எங்களது நிதிக்கொடையாளர்கள் குறித்தும், நாங்கள் தனிநபர் நிதிகளை ஏதேனும் பெறுகிறோமா மற்றும் பொதுமக்கள் கூட்டிசைவு நிதி திரட்டலை (crowdfunding) பயன்படுத்துகிறோமா என்றும் குறிப்பாகக் கேட்டறிந்தனர். சொல்லப்போனால், வேறொரு அமைப்பு பொதுமக்கள் கூட்டிசைவு நிதி திரட்டலை மேற்கொள்ள முயன்றபோது, யாரென்று தெரியாத (anonymous) பங்களிப்பாளர்கள் எவரும் பணமோசடியில் (money laundering) ஈடுபடவில்லை என்பதற்கு அதிகாரியொருவர் தனிப்பட்ட முறையில் உத்தரவாதம் அளித்தால் ஒழிய, அந்த நடைமுறைக்கு அனுமதி அளிக்க வங்கி மறுத்துவிட்டது. இதனைச் செய்ய வெளிப்படையாக எவரும் முன்வரமாட்டார்கள்.

விடய ஆய்வு 5

CSO அமைப்பின் அமைவிடம்: **மட்டக்களப்பு, கிழக்கு மாகாணம், இலங்கை**

செயற்படும் பிரதேசம்: **கிழக்கு மாகாணம்**

பணித் துறைகள்: **பாலின அடிப்படையிலான வன்முறையால் (SGBV) பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசரகாலச் சேவைகள், பெண்களின் உள்ளூர் ஆட்சி பிரவேசம் மற்றும் ஆய்வு, மற்றும் கொள்கை மாறுசீரமைப்புகளுக்கான ஆதரவு (குறிப்பாக முஸ்லிம் பெண்கள் மீது கவனம் செலுத்துதல்)**

2019 ஆம் ஆண்டிற்குப் பிறகு, சர்வதேச நிதியமொன்றிடமிருந்து நாங்கள் நிதியைப் பெற்றபோது, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட (NGO Secretariat) அமைப்புகளுக்கு மட்டுமே எதிர்காலத்தில் இத்தகைய நிதிகளைப் பெறுவதற்கும், மீளப்பெறுவதற்கும் (Withdraw) அனுமதி வழங்கப்படும் என்று வங்கி எங்களுக்குத் தெரிவித்தது. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தால் வெளியிடப்பட்ட (NGO Secretariat) கடிதமொன்றைக் குறிப்பிட்ட வங்கி, அதனடிப்படையில் நிதியை பெற்றுக்கொள்வதை நிறுத்தியது. அதே நேரத்தில், அதே நிதியைப் பெற்ற மற்றொரு அமைப்பு, வேறு வங்கியின் மூலம் அந்நிதியை பெற்றுக்கொள்ள முடிந்தது. இது வங்கிகளுக்கிடையேயான அணுகுமுறையில் கணிசமான வேறுபாடுகள் இருப்பதை எனக்கு உணர வைத்தது. எங்களது வங்கி முகாமையாளருடனான கலந்துரையாடல்களுக்குப் பிறகு, எதிர்காலத்தில் ஏதேனும் வெளிநாட்டு நிதியைப் பெறுவதற்கு முன் நாங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், பணத்தைத் மீளப்பெறுவதற்கு அவர் ஒப்புக்கொண்டார்.

2024 ஆம் ஆண்டளவில், நிதி வாய்ப்புகள் படிப்படியாகக் குறையத் தொடங்கின. புதிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான சட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டு வந்ததுடன், சில நிதிக்கொடையாளர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் (NGO Secretariat) பதிவைக் கட்டாயமாக்கினர். எனவே, பதிவுச் செயற்பாடுகளை தொடங்குவதற்கான அந்தக் கடினமான முடிவை நாங்கள் எடுத்தோம். இருப்பினும், இந்த முடிவு எங்களுக்கு மிகவும் சிக்கலான ஒன்றாக மாறியுள்ளது. நாங்கள் பதிவுச் செயற்பாடுகளை தொடங்கி இப்போது கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இதற்காகப் பெரும் விலையைக் கொடுத்துக்கொண்டே, இன்னும் ஒப்புதலுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம்.

எங்களது அமைப்பின் பதிவு விபரங்கள், பணிப்பாளர் சபை தகவல்கள், பயனாளிகளின் பிரதேசங்கள், பிரதேச செயலக ஒப்புதல்கள் மற்றும் பொலிஸ் சான்றிதழ்கள் (Police Clearances) உள்ளிட்ட அனைத்துத் தேவையான ஆவணங்களையும் நாங்கள் சமர்ப்பித்தோம். சமர்ப்பித்த பிறகு, ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், பதிவு பின்னர் வழங்கப்படும் என்றும் உறுதிப்படுத்தும் கடிதம் எங்களுக்குக் கிடைத்தது. இருப்பினும், அந்த இடத்திலிருந்து நாங்கள் இராணுவம், முப்படை, பொலிஸ் மற்றும் இதர அதிகாரிகளின் தொடர்ச்சியான வருகைகளையும் விசாரணைகளையும் எதிர்கொண்டோம். அவர்கள் கோரிய தகவல்கள் எங்களது எதிர்பார்ப்புகளுக்கு அப்பாலும் எங்களது நிதிக்கொடையாளர்களின் ஒப்பந்தங்களை மீறுவதாகவும் இருந்தன. நாங்கள் இளைஞர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சிகளை நடத்தியபோது, பங்கேற்பாளர்களின் பெயர்கள், அவர்களின் தேசிய அடையாள அட்டை (NIC) எண்கள்/பிரதிகள், அவர்கள் கல்வி கற்ற பாடசாலைகளின் விபரங்கள் போன்றவற்றை அவர்கள் கேட்டனர். இத்தகவல்களை வழங்க நாங்கள் மறுத்துவிட்டோம்.

விசாரணை அத்துடன் நிற்கவில்லை. பின்னர், அதிகாரிகள் எங்களது பணிப்பாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் தேசிய அடையாள அட்டை எண்கள் பற்றிய விபரங்களையும் கோரினர்.

எங்களது பதிவின் நோக்கத்திற்காகப் பொலிஸின் ஒரு பிரிவு மட்டுமே தங்களது அனுமதி அறிக்கையை நிறைவு செய்வதில் கவனம் செலுத்துவது போல் தோன்றியது. இப்போது கூட, இராணுவ மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் எங்களது நடவடிக்கைகள் பற்றிய தகவல்களுக்கு எங்களைத் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகின்றனர். அண்மையில், இராஜதந்திர தூதரகங்களின் பிரதிநிதிகள் எங்களது பகுதிக்கு வருகை தந்தபோது, நாங்கள் அவர்களைச் சந்திக்கிறோமா, என்ன விவாதிக்கப்படும், என்ன தகவல்களைப் பகிர்ந்து கொள்ள உத்தேசித்துள்ளோம் என்று கேட்டு எங்களுக்கு அழைப்புகள் வந்தன. சில நேரங்களில், அந்தச் சந்திப்புகள் குறித்து அறிக்கையிடுவதன் மூலம் நாங்கள் தகவல் வழங்குபவர்களாக (Informants) செயல்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பது போல் உணர்கிறோம்.

7. முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

பரிந்துரை 8-க்கான நிதி நடவடிக்கைகள் பணிக்குழுவின் (FATF) சிறந்த நடைமுறைகள் பற்றிய வழிகாட்டுதலில் இருந்து எடுக்கப்பட்ட இந்த பகுதி, மிக முக்கியமான புரிதலையும் தெளிவையும் தருகிறது:

> "தனது பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது இலாபநோக்கற்ற நிறுவனங்களை (NPOs) எதிர்மறையாகவும் ஏற்புடையதற்ற அளவிலும் (disproportionately) பாதிக்கக்கூடாது என்பதையும், மேலும் சிவில் சமூகத்திற்கும் மனிதநேய உதவிகளை வழங்குவதற்கும் தேவையின்றி தடையாக இருக்கக்கூடாது என்பதையும் FATF அங்கீகரிக்கிறது. அண்மைக்காலங்களில், நிதி நிறுவனங்கள் சட்டப்பூர்வ இலாபநோக்கற்ற நிறுவனங்களுக்கான (NPOs) நிதிச் சேவைகளை முடிவுக்குக் கொண்டுவருவது அல்லது கட்டுப்படுத்துவது அல்லது இலாபநோக்கற்ற நிறுவனங்களின் NPOs பரிவர்த்தனைகளைச் செயற்படுத்த அதிக நேரத்தை எடுத்துக்கொள்கின்றன என அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. நாட்டில் இயங்கும் வங்கிகளுக்கிடையிலான பணப்பரிமாற்ற (wire transfers) தாமதங்கள், தெளிவற்ற மற்றும் அதிகரித்து வரும் முன்னாய்வு நடைமுறையின் தேவைகள் (due diligence requirements) ஆகிய நிகழ்வுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன. இதில் இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) தங்களது பயனாளிகளுக்குச் சேவைகளையும் ஆதரவையும் வழங்குவதற்கான திறனைத் தடுப்பது, வங்கிக் கணக்குகளைத் திறக்க இயலாமை, வங்கிக் கணக்குகள் தன்னிச்சையாக மூடப்படுதல், மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் அல்லது அனைத்து வாடிக்கையாளர் பிரிவினர் மற்றும் பரிவர்த்தனைகளை மொத்தமாக நிறுத்துதல் ஆகியவை இதில் அடங்கும். இவைகள் அபாய அடிப்படையிலான அணுகுமுறையானது (risk-based approach) சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதுடன், FATF தரநிலைகளுக்கும் முரண்பட்டதாகும்."

பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கு எதிரான (CFT) நடவடிக்கைகள் சட்டப்பூர்வ அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGO) நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்றும், அத்தகைய இடையூறுகள் அடையாளம் காணப்பட்ட இடங்களில் தணிப்பு நடவடிக்கைகள் (mitigating measures) எடுக்கப்பட வேண்டும் என்றும் நிதி நடவடிக்கைகள் பணிக்குழுவின் (FATF) வழிகாட்டல் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) தொடர்பாக வரும்போது வங்கிகளை மிதமிஞ்சிய அறிக்கையிடல் மற்றும் உரிய கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்துவதன் மூலம், அளவுக்கு அதிகமான இணக்கப்பாடு (overcompliance) மற்றும் முறையான நிதி விலக்கல் (systemic financial exclusion) போன்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவு (CBSL/FIU) வழங்கிய அறிவுறுத்தல்களை மீறியும், நிச்சயமாக நிதி நடவடிக்கைகள் பணிக்குழுவின் (FATF) தேவைகளுக்கு அப்பாலும் வங்கிகள் செல்வதால் இலாபநோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) நிதி நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்தும் நிதிச் சேவைகளை பெறுவதிலிருந்தும் தடுக்கப்படுகின்றன.

இவை எதிர்பாராத விளைவுகள் அல்ல. நாட்டின் சட்ட ரீதியான கொள்கை, அரச சார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடலின் போது வெளியிடப்பட்ட பகிரங்க அறிக்கைகள் மற்றும் வாய்மொழி கருத்துக்கள் ஆகியவற்றுடன் இணைந்து, இலாபநோக்கற்ற நிறுவனங்களுக்கு (NPOs) கட்டுப்பாடுகள் நிறைந்த, கடுமையான கண்காணிப்பிற்குரிய மற்றும் பாதுகாப்பு தீவிரமளிக்கப்பட்ட ஒரு செயல்பாட்டுச் சூழலை உருவாக்க முனையும் திட்டமிட்ட முயற்சியை வெளிப்படுத்துகின்றன. இங்கு, ஒரு சிறிய பரிவர்த்தனை, ஒரு வெளிநாட்டு நிதிக்கொடையாளர் அல்லது ஒரு குறிப்பிட்ட மனித உரிமைகள் சார்ந்த செயற்திட்டம் என எதுவாக இருந்தாலும், அது ஆய்வுகளையோ அல்லது அறிக்கை அளிப்பதையோ தூண்டக்கூடும். அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGOs) செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்த முயலவும், அவற்றின் இயங்குதன்மையை அரசின் ஒப்புதலுக்கு உட்பட்டதாக மாற்றவும் உளவு முகவர் நிலையங்கள் முதல் உள்ளூர் அதிகார அமைப்புகள் வரை கிடைக்கக்கூடிய ஒவ்வொரு கருவியையும் பயன்படுத்தும் அரசின் வழக்கமான செயல்முறையாக (modus operandi) உள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்க நிதி நடவடிக்கைகள் பணிக்குழுவின் (FATF) தேவைகளை அரசு மற்றொரு கருவியாகப் பயன்படுத்தி வருகிறது. எனவே அதன் தரநிலைகள் ஆயுதமாக்கப்படுகின்றன (weaponised).

மேலே குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளபடி, வங்கிகள் மீது இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவினால் (CBSL/FIU) நடைமுறைப்படுத்தப்பட்ட விரிவான அறிக்கையிடல் தேவைகளின் நேரடி விளைவாக நிதிச் சேவைகள் மற்றும் நிதி ஆதாரங்களை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் கட்டுப்படுத்தப்பட்டமையானது, அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) சுதந்திரமாக இயங்க முடியாமல் போவதற்கும், அதன்மூலம் சேவைகளைப் பெறுகின்ற பாதிப்பின் விளிம்பிலுள்ள குழுக்கள் மற்றும் சமூகங்கள் பாதிப்பிற்குள்ளாகின்றன.

அ. பரிந்துரைகள்

i. இலங்கை அரசாங்கத்திற்கான பரிந்துரைகள்

அரசாங்கம் பின்வருவனவற்றைச் செயற்படுத்த வேண்டும்:

- சிவில் சமூக அமைப்புகள் (CSOs) சுதந்திரமாக இயங்குவதையும், அமைப்புகளை அமைப்பதற்கான உரிமையை (Right to Association) அனுபவிப்பதையும் உறுதி செய்தல்.

- பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான உடன்படிக்கைச் சட்டம், நிதிப் பரிவர்த்தனைச் சட்டம் மற்றும் பணமோசடித் தடுப்புச் சட்டம் ஆகியவற்றில் ஜூலை 2025 இல் கொண்டுவரப்பட்ட திருத்தங்களை நீக்குதல் ஏனெனில் அவை நிறைவேற்று அதிகாரத்திற்கு (பொலிஸ், நிதி புலனாய்வுப் பிரிவு – FIU) பரந்த மற்றும் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குவதுடன், சிவில் சமூகத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஆயுதமாகப் பயன்படுத்தப்படக்கூடிய நிர்வாகரீதியாக அவசியமற்ற மற்றும் சுமையான விதிகளைக் கொண்டுள்ளன.

- சுற்றறிக்கை இல. 01/2019 ஐ இரத்து செய்வதுடன், அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களது நிதிகளை அணுகுவதையோ அல்லது வங்கிக் கணக்குகளைத் திறப்பதையோ தடுப்பதற்குத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்பது குறித்து நிதி நிறுவனங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

- பதிவுத் தேவைப்பாடுகள் தொடர்பாக குழப்பத்தை உருவாக்கி, அரச சார்பற்ற நிறுவனங்கள் வங்கிக் கணக்குகளைத் திறப்பதைத் தடுக்கும் 01/2025 ஆம் இலக்க சுற்றறிக்கையை இரத்துச் செய்தல்.

- நிதியியல் உளவறிதல் பிரிவின் (FIU) சிவில் சமூக அமைப்புகளுடனான (CSO) ஈடுபாட்டில் உரிய நடைமுறையும் வெளிப்படைத்தன்மையும் பேணப்படுவதை உறுதிப்படுத்துதல்.

- 2026 ஜூலை மாதம் விநியோகிக்கப்பட்ட வரைவு NGO சட்டத்தை திரும்பப்பெறுதல்.

- புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வரைவு செய்யும் போது, இலாப நோக்கற்ற அமைப்புகளின் (CSOs) செயல்பாடுகள் மற்றும் பணிகளைப் பாதிக்கும் வகையில் சிவில் சமூகத்தை (civil society) அர்த்தமுள்ள மற்றும் உள்ளடக்கிய முறையில் பங்கெடுக்கச் செய்ய வேண்டும் மேலும் அச்சட்டங்கள் இலங்கையின் சர்வதேச மனித உரிமைக் கடப்பாடுகள் (international human rights obligations) மற்றும் அரசியலமைப்பு உத்தரவாதங்களுக்கும் (constitutional safeguards) பொருந்துபவையாக அமைவதை உறுதி செய்ய வேண்டும்.

- அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) மீதான மேற்பார்வையிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் ஈடுபாட்டை நீக்குதல்.

ii. FATF இற்கு

- இலாப நோக்கற்ற அமைப்புகளின் (NPOs) செயல்பாடுகளை முடக்குவதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் நிதி நடவடிக்கைகள் பணிக்குழுவின் (FATF) தரநிலைகளை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தாமல், அரசாங்கம் அத்தரநிலைகளுக்கு முறையாகக் கட்டுப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.



இலங்கை சிவில் சமூக

நிதி நடவடிக்கை பணிக்குழு வலையமைப்பு

August 2026